விலை சதம் 50

பக்கங்கள்— 8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ்,
றிக்கோ பிடா
வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

★

# ஈழநாடு
## வார மலர்

THE EELA NADU VARAMALAR

"மாணவர் செய்திட்டம்"
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
விநியோகப் பகுதி
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77
யாழ்ப்பாணம்.

மலர் 19 | புரட்டாசி 2 | ஷவ்வால் 4 | ஞாயிற்றுக்கிழமை | [18—9—77] | இதழ் 218

# தேசிய ஐக்கியம் ஏற்பட மாகாண ஆட்சி அமைப்பு!

## இந்தியாவைப் பின்பற்றி அரசியலமைப்பில் திருத்தம்

### முன்னேஸ்வரம் குரு பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**இந்தியாவிலுள்ளது போன்று இலங்கையிலும் மாகாண ஆட்சி அமைப்பைக் கொண்டதாக அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதன் மூலம் இலங்கையில் தேசிய ஐக்கியத்தைக் சாத்தியமாக்குவதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் விருத்திசெய்து வேலையில்லாப் பிரச்னையையும் தீர்க்கமுடியும்.**

இப்படியான யோசனை [illegible] இந்து மத குருவும் முன்னேஸ்வரம் தேவஸ்தான பிரதம குருவுமான ஸ்ரீ இரத்தின கைலாசநாதக் குருக்கள் பிரதமர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த மகஜரின் பிரதிகள் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தலைவர்களுக்கும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதில் பிரதமரும் பௌத்த மதபீடத் தலைவர்களும்கொண்டுள்ள ஆர்வத்தை வரவேற்றுள்ள ஸ்ரீ இரத்தின கைலாசநாதக்குருக்கள் நாட்டிலுள்ள சகல சமூகங்களுக்குமிடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்தி உண்மையான ஐக்கியத்தை உருவக்குவதற்குச் சில யோசனைகளையும் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் வருமாறு:

(1) பிரதமமந்திரி, மந்திரி சபையினர் ஆகியோருடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேசிய அரசுப் பேரவை. மந்திரிகள் குறைந்தது ஒரு மாகாணத்துக்கு ஒருவராவது மந்திரிசபையில் அங்கம் பெறவேண்டும்.

(2) ஒன்பது மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களிலிருந்தும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமையவேண்டும். இந்த மாகாண சபைக்கு ஒரு மந்திரிசபையும் அதன் தலைவராக ஒரு முதன் மந்திரியும் இருப்பார்.

(3) ஒன்பது மாகாணங்களுக்கும் ஒவ்வொரு ஆளுநர் இருப்பார்.

(4) இந்திய அரசியலமைப்பில் போன்று தேசிய அரசுப்பேரவையின் [illegible] அதிகாரங்கள் அமையும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நல்லெண்ணத் தூதுக்குழு!

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடக்கே வந்துள்ள அரசாங்க ஊழியர்களையும் மற்றவர்களையும் பழைய இடங்களுக்குத் திரும்புமாறு அழைப்பதற்குக் கொழும்பிலிருந்து வந்த நல்லெண்ணத் தூதுக் குழுவொன்று நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்கள் குழுவொன்றைச் சந்தித்துப் பேசியது.

பிரதமர் பிறந்த தினத்தில்

## கைதிகளுக்கு நேற்று பொது மன்னிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் பிறந்த தினத்தையொட்டி நேற்று சிறைக்கைதிகள் பலருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

இந்தப் பொது மன்னிப்பின் கீழ் இரண்டாவது ரகத்தில் அபராதம் செலுத்தாமல் சிறை சென்றோருக்கு விடுதலை வழங்கப்பட்டது. சாதாரண சிறைத்தண்டனை பெற்றவர்கள் சிலரும் விடுதலை பெற்றனர்.

நாடு [illegible] சிறைகளிலிருந்து சுமார் 500 பேர் இந்தப் பொதுமன்னிப்பின்கீழ் பயன்பெற்றனர்.

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் நாட்டில் இடம்பெற இனவாத சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு திரும்பியுள்ள தமிழாசிரியர் நிலைகுறித்து ஆராய்வதற்காக இன்று காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மீண்டும் கூடுகின்றது.

## திருமலையில் மிகப்பெரும் மா ஆலை

கொழும்பு

வருடாந்தம் 4லட்சம்தொன் மாவை உற்பத்திசெய்யும் மிகப்பெரும் மா ஆலை ஒன்றை திருக்கோணமலையில் நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தென்கிழக்காசியாவில் மிகப் பெரியதும் இலங்கையின் இரண்டாவதுமான இந்த ஆலையை இங்கு நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஒன்று இன்று கொழும்பில் இலங்கை அரசுக்கும் சிங்கப்பூர் பிறைமா நிறுவனத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஆலையை அமைக்க சிங்கப்பூர் நிறுவனம் 3 கோடி அமெரிக்க டாலரை வழங்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

★கைக்குண்டு ★கொள்ளை ★சதிமுயற்சி

# 10 ஆண்டுக்குக் குறையாத சிறைத் தண்டனை

## சட்டத்தை அமுலாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சட்டவிரோதமாக, லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிகள் வைத்திருப்பது, கைக்குண்டுகள் தயாரித்தல், இராணுவ பயிற்சியளிப்பது, சதிமுயற்சியில் ஈடுபடுவது, வங்கிக் கொள்ளை போன்ற தேச விரோத சம்பவங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத சிறைத்தண்டனை விதிப்பதற்கான சட்டவிதிகளை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

இச்சட்டவிதிகள் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டவிதிகளுடன் இணைந்து அமுல் செய்யப்படுமாம். முன்னர் அவசரகால நிலையின்போதே இப்படியான சட்டவிதிகளை அமுல்செய்யமுடியும்.

முன்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், நீதி மன்றத்தில் அளிக்கும் வாக்குமூலங்கள் விசாரணையின் பின்னரே ஏற்கப்படும். புதிய சட்டவிதிகளுக்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அளிக்கும்வாக்கு மூலம் நீதிமன்றத்தில் எந்த விசாரணையுமின்றி முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் சட்டம் இடம்கொடுக்குமென கூறப்படுகின்றது. (செ)

## பூட்டோ மீண்டும் கைது!

இஸ்லாமாபாத், செப். 17

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுஃப் சுல்பிகார் அலிபூட்டோ இன்று இராணுவ அதிகாரிகளால் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

அடுத்தமாதம் நடைபெற இருக்கும் தேர்தல்பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்த போதே ஜுஃப் பூட்டோவும் அவரது மக்கள் கட்சியைச் சேர்ந்த 10 தலைவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளையில் ஜுஃப் பூட்டோவின் பாரியாரான பேகம் முஸாரத் பூட்டோ மக்கள் கட்சியின் பதில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## தமிழ் அகதிகளுக்கு பொலிசாரும் உதவி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரதமர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவின் பிறந்த தினத்தையொட்டி, யாழ்ப்பாணம், குருநகர், ஊர்காவற்றுறை, சுன்னாகம், கோப்பாய் பொலிசார், கொழும்புத்துறை அகதிகள் முகாமுக்கு அரிசி, தேயிலை, கருவாடு, மரக்கறி, தேங்காய் ஆகிய உணவுப் பொருட்களுடன் ரொக்கப் பணமும் அன்பளிப்புச் செய்தனர்.

மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்திரா இராஜசிங்கமும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், பொலிஸ் அத்தியட்சகர் திரு. செனிவிரத்தின ஆகியோர் கூட்டாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக உணவுப் பொருட்களும் பணமும் பொலிசாரிடமிருந்துசேகரிக்கப்பட்டது.

குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. தேவா, பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் ஹொட்வின் குணசேகரா, சப்-இன்ஸ்பெக்டர் திரு. ரணசிங்கா, சார்ஜன்ட் திரு. அன்ரன் ஆகியோர் கொழும்புத்துறை அகதிகள் முகாம் பொறுப்பதிகாரியிடம் இப்பொருட்களைக் கையளித்தனர்.

### ஆனைக்கோட்டை பொலிசாரும்...

ஆனைக்கோட்டைப் பொலிசார் நேற்று கோப்பாய் அகதி முகாமிலுள்ளவர்களுக்கு அரிசி, மா மற்றும் உணவுப் பொருள்களை வழங்கினர். (செ-இ)

## தேவை

எமது சங்கத்தின் புடவை அச்சிடும் நிலயத்திற்குவர்ணம் கலக்கக்கூடியவரும் (Colour combination, Dye mixer and exposer) புடவை அச்சிடும் ஸ்கிரீன் தயாரிக்கக்கூடியவருமான (ஆண்) ஒருவர் தேவை. வயதெல்லை-35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல்வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்-தகுதியின் அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படுவதுடன் விசேட அலவன்சும் வழங்கப்படும். அனுபவம்-புடவை அச்சிடும் தொழிலில் ஆகக் குறைந்தது ஆறு வருட அனுபவமுடையவராய் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களை தலைவர், யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26-9-77 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
யா-மா-புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
7139

## விளம்பரம்

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்
ஊர்காவற்றுறை

## கேள்விப்பத்திரம்

பின்வருவனவற்றிற்கு கேள்விப்பத்திரங்கள்கோரப்படுகின்றன. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 26-9-77 திகதிக்குமுன் அனுப்பிவைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 24-9-77 பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 250-வைப்புச் செலுத்தி இருத்தல் வேண்டும்.

1. வெற்றுச்சாக்குகள்–5200
2. வெற்று நம்கள் – 105
3. பாவித்த லொறி ரயர்கள் – 8
4. பாவித்த பற்றிகள்– 6

பொதுமுகாமையாளர்
15-9-77
7138

# ரஷ்ய மொழியில் ஈழத் தமிழ்ச்சிறுகதைகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் மிக விரைவில் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்படவுள்ளன.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களது சிறுகதைகளை ரஷ்ய மொழியில் பெயர்க்க ரஷ்ய எழுத்தாளர் ஒருவர் ஆர்வம் கொண்டுள்ளார்.

இவ்வெழுத்தாளரின் பெயர் திரு. வித்தா ஃபுர்னிக்கா என்பதாகும். ஈழத்துச் சிறுகதைகளில் ஈடுபாடுகொண்ட இவர் தமிழ்ச்சிறுகதை மொழி பெயர்ப்புத் தொடர்பாகச் சிறுகதை எழுத்தாளர் திரு டொமினிக்ஜீவாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் திருவாளர்கள் கே. டானியல், செ கணேசலிங்கம், கே ரகுநாதன், எஸ். பொன்னுத்துரை, காவலூர் ராஜதுரை ஆகியோரது 1973—77-ம் ஆண்டிற் கிடைப்பட்ட சிறுகதை ஆக்கங்களை ரஷ்ய மொழியில் பெயர்த்துப் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதற்கான உதவிகளைச் செய்யுமாறும் கோரியுள்ளார்.

திரு. வித்தர்ஃபூர்னிக்கா கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு அதனைக்கற்றுவருகிறார் ஏற்கனவே இவர் சிறுகதை எழுத்தாளர்களில் புகழ் பெற்றவர்களான ஜெயகாந்தன் போன்ற இந்திய எழுத்தாளர்களின் முப்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை ரஷ்ய மொழியில் பெயர்த்துள்ளார். அண்மையில் ரஷ்யா சென்றுள்ள பேராசிரியர் க. சிவத்தம்பியையும் இவர் சந்தித்துத் தமிழ் இலக்கியம் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கலந்துரையாடியுள்ளார்.

இவர் தற்போது ரஷ்யப் பிரசுர நிலையமான முன்னேற்றப்பதிப்பகத்தின் இந்தியப் பகுதியில் கடமையாற்றுகின்றார். (கா-அ)

## The Jaffna Private Hospitals

## VACANCIES

WANTED

1. MEDICAL OFFICER M. B. B. S.
   (a) Fully trained in Gynaecology and Obstetrics
   (b) Salary negotiable.
2. QUALIFIED NURSES:- Registered by the Ceylon Medical College Council.
   (a) In General Nursing & Mid-wifery.
   (b) In General Nursing.
   (c) In Mid-Wifery.
3. Closing Date:- 23-9-77.

Apply to:- The Secretary,
The Jaffna Private Hospitals,
395, Navalar Road.
Jaffna. 7146

## அந்தியேட்டிக் கிரியைகள்



### கந்தர் நாகமுத்து

தோற்றம்: 10-3-1896
மறைவு : 19-8-1977

எங்கள் யாவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய வறுத்தலைவிழான் மலாய் நாட்டுப் பென்ஷன்தார் கந்தர் நாகமுத்து அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-9-77 ஞாயிற்றுக்கிழமை (இன்று) முகத்துவாரத்தில் நடைபெறுகின்றன.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் ஆகியோர்.
7102

## காணி தேவை

நாலு பரப்பு முதல் இருபது பரப்புவரையுள்ள வெறுங்காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. நகரின் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது. கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல:7140, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7140

## நிலாவெளி கிராமாட்சி மன்றம் நிலாவெளி

## தமிழ் தட்டச்சு இயந்திரம் விற்பனை-

### விலைக்குறிப்புகள் கோரல்

கீழ்க்காணும் பொருள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்வதற்கு விலைமதிப்பீடுகள் கோரப்படுகின்றன.

1. நல்ல நிலையிலுள்ள 9'' பார் உடைய தமிழ் ஒலிம்பியா இனத்தைச் சேர்ந்த தட்டச்சு இயந்திரம்.– ஒன்று.

விலைக் கோரிக்கைகள் அரக்கு முத்திரையிடப்பட்டு 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28-ம் திகதிக்கு (28-09-77) முன்னதாக கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுக்கடித மூலமாக அனுப்பப்படல்வேண்டும். தட்டச்சுஇயந்திரத்தை பார்வையிட விரும்புவோர் காரியாலய நாட்களில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கு மிடையில் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

கே. பரராசசிங்கம்,
நிர்வாகஸ்தர்
நிலாவெளி கிராமாட்சி மன்றம் – நிலாவெளி.
நிலாவெளி கிராமாட்சி மன்ற அலுவலகம்,
நிலாவெளி 10-9-77.
7073

## தேவை

### கிளை முகாமையாளர் பதவி வெற்றிடம்

### துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம்

மேற்படி சங்கத்திற்கு கிளைமுகாமையாளர்கள் தரம் III தேவைப்படுகிறது. பின்வரும் தகைமைபுடையோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

1. கல்வித் தகைமை:- க. பொ. த. ப. பரீட்சை (சாதாரணம்)யில் ஆறு பாடங்களில் சித்திபெய்தியிருக்க வேண்டும்.
2. கூட்டுறவுப்பயிற்சி விரும்பத்தக்கது.
3. வேதனம்:- 180—320 / 8X10—6X10
4. வயது: 20-35
5. பிணை: ரூபா 1500/- ரொக்கம், ரூபா 3000/- ஆதனம்.

விண்ணப்பங்களை தலைவர். துணுக்காய் பகுதி பல நோ, கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் என்ற விலாசத்திற்கு என்வலப் இடதுமேல் மூலையில் 'கிளை முகாமையாளர் கட்காகிய விண்ணப்பம்' என்று குறிப்பிட்டு 28-9-77-க்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பவும்.

பொதுமுகாமையாளர்
7136

## கேள்விவிளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம் 2-ம் இல. மாட்டிறைச்சிக்கடை,

### கிளிநொச்சிச்சந்தை

9-9-77 ந் திகதிய விளம்பரம் தொடர்பாக, ரெண்டர்ப் பத்திர விநியோகம் 20-9-77 நண்பகல் 12-00 மணிவரையும் ரெண்டர்ப் பத்திரங்கள் பாரம் ஏற்றல் பி. ப. 3-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப்பட்டணம்.
7137

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வவனியாவில் சகல வசதிகளும் உள்ள அரிசி ஆலை விற்பனைக்குண்டு. நெல்காச்சும் யந்திரம், அரசாங்கத்திற்கு நெல் குற்றும் கோட்டா ஆகியனவும்உண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல.7059 C/o ஈழநாடு.

மீசாலை தெற்கில் மின்சார வசதியுள்ள வீதி அருகே கிணறு 2 அறை வீடு கட்டிக் குறையிலுள்ள பெரிய வீடு மா, பலா, தென்னை, வேம்பு, தேக்கு மரங்களுடன் 8 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7134

சுண்டிக்குளி பண்டியன்தாழ்வின் புங்கன்குளம் வீதியில் வீட்டு அத்திபாரத்துடன் 2 பரப்பு, 3 குளி காணி விற்பனைக்குண்டு. சென். அந்தனீஸ், சென். ஜோன்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, புங்கன்குளம் புகையிரதநிலையம் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ளது. பஸ் போக்குவரத்துள்ள இடம். விபரங்களுக்கு ஜெ. எஸ். பிறெட்றிக், இல. 2, மவுண் காமல்வீதி, யாழ்ப்பாணம். 7132

இறக்குமதிசெய்யப்பட்ட 10 கலன் கொள்ளக்கூடிய திறந்து பூட்டக்கூடிய அலுமேனியம் பீப்பாக்கள் (Cans) விற்பனைக்குண்டு. சிவம் ஸ்ரோர்ஸ், கே. கே. எஸ். வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். 7129

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 4 பரப்பு காணியும் சிறிய வீடும் (சிறு திருத்தங்களுடன்) விற்பனைக்குண்டு. யோகாநந்தன், 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7111

ஆங்கில வில்லியேஸ் ''குட் இனவ்'' 1 1/2'' வாட்டர் பம் 383, நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி சந்தி, யாழ்ப்பாணம். 7128

(1) யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் 3 பரப்புக் காணி (2) யாழ். நகரிலிருந்து மூன்று மைல் சுற்றுடலில் பஸ்நிலையத்துக்கு அருகில் கிணறு மற்றும் பிரயோசனங்களுடன் 12 பரப்புக் காணி. (3) ஒரு றலி பைசிக்கிள். – தொடர்பு 78, அரசடி வீதி, இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபம், தொலைபேசி- 484. 7117

திருநெல்வேலி செங்குந்தாவுக்கு சமீபமாக ஒன்றரைப் பரப்புக் காணியும் நல்ல வசதியான வீடும் விற்பனைக்குண்டு. பாடசாலை, மார்க்கெட், பஸ் நிலையம் அருகே. நியாயவிலை கோரப்படுகிறது. தொடர்பு: அருணோதயம், செங்குந்தா லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 7147

## தேவை

தையற்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும்: விம்ஸ், 14, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்) 7143

அனுபவமுள்ள கடைச்சல் தொழிலாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும் ஸ்டார், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 7127

அனுபவமுள்ள கம்மாலைத் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும். ஸ்டார், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 7126

வார்ப்புவேலை, லேத்வேலை, கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும் ராதா மெஷின் கம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7112

1. உதவி மனேச்சர் /பெண் மனேச்சர் / வரவேற்பாளர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும், தமது சொந்த கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபா 250/-ம் மற்றைய அலவன்சுகளும். பிணை ரூபா 2500/- கட்டவேண்டும். [2] மேலைத்தேச கீழைத்தேச உணவுகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். விண்ணப்பிக்கவும். பாம் கோட், 202, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7145

விளையாட்டுப் பொருள் உற்பத்தி ஸ்தாபனத்திற்கு பெண் ஓவியர்களும், யந்திரக் கடைச்சலில் (மரம்) அனுபவமுள்ளவர்களும். பழகுவதற்குப் இடங்கள் காலியாக உள்ளன. தகுதி வாய்ந்தவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 30-9-77, விளம்பர இல7144 C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7144

## வகுப்புகள்

குறுகியகால விவசாயப் பயிற்சி. இளைஞர்கட்கும் இளம் பெண்களுக்கும். மீகோழி வளர்ப்பு, கால்நடைவளர்ப்பு, இரசாயனப் பொருட்கள், செயற்கை உரப்பசளைகள் ஆகிய விடயங்களில் தனித் தனியான வகுப்புகள் காலை வேளைகளில் நடைபெறும். உடனடியாக பதிவுசெய்யவும். அதிபர், விவசாய நிறுவனம், யா. க. தொ நு. பகுதி, மருதனைமடம், சுன்னாகம். 7142

# அமுத கலசம்

அ. செ. மு.

கடற்கரைத் தென்னை மரம் சொல்லியதாக நான் முன்பொரு சமயம் எழுதிய கதை என் பிரிய வாசகநேயர் சிலரின் ரசனையை வெகுவாகக் கவர்ந்ததாம். அதனால், 'கடற்கரைப் பக்கம் நீங்கள் போவதில்லையா மாமா, அந்தத் தென்னையாரிடம் இன்னும் ஒரு கதை பிடுங்கிப்போடுங்களேன்! மெத்தத் தாகமாயிருக்கிறது. வயசாகிப்போன உங்களைத் தென்னைமரத்தில் ஏற்றித் தொல்லைப்படுத்துவதற்கும் மனம் மெத்தவும் பயப்படுகிறதுதான். இருந்தாலும் சுவையான கதை கேட்கும் ஆசை ஒரோர் சமயம் கட்டு மீறி எழுந்துவிடுவதால் அது சமயம் இந்தவிதமான அசட்டுத் துணிவும் அங்கு நம்மகத்தே பிறக்கிறது. யாழ். எடுத்து வாசித்து நமக்குற்ற மனவாட்டம் நீக்கி இன்பம் சேர்த்து உதவமாட்டீர்களா'– என்று இவ்வாறாக புதுமை எழுத்திலக்கிய நயம் மல்கிச் சுரக்கும கதைச் சுவை பொங்கிப் பெருக இரந்து மன்றாடி நிற்பர் அவர். என் சிந்தைக்கினிய சிறார். அவர்தம் அன்புப்பணிப்பினை மீற ஆற்றலிலேன். ஆதலின், பல்லாண்டு பின்னோக்கிப் பறந்து, ஒரு பள்ளி மாணவனாகச் சிறுமை பூண்டு திரும்பவும் வெள்ளவத்தைக் கடற்கரைக்கு ஓடி அந்த வெண்மணற்திட்டில் விழ்கிறேன்.

அடுத்தடுத்துச் சில தினங்கள் கடற்கரைக்குப் போய் தென்னையாரைச் சுற்றினேன். விடியற்காலை, நண்பகல் நடுமத்தியானம், சாயங்காலம் மூன்று வேளையும் ஒரோர் தினம் ஒவ்வொரு பொழுது தவறாமல் போனேன். எல்லா நாளும் எல்லா வேளையும் காதல் சிட்டுகள் என் பார்வைக்கு அங்கு தோற்றப்பட்டார்கள்.

"ஏனடா தம்பி, கிட்டத்திலே எங்கேயும் புதுசா கடற்கரைப் பக்கமாகக் குடிவந்திருக்கிறியா?" – ஒற்றைக்கொம்பனாக கிளைவிடாமே வளர்ந்தோங்கி நின்ற தென்னையார் ஒரு தினம் காலை வினவினார்.

'சேச்சே அப்படியெல்லாம் ஒன்றுமில்லை தென்னையாரே! நான் கொழும்பூருக்கே புது வரவு' என்றேன். 'வடக்கே வெகுதூரம் என்னூர். இன்னும் சில தினங்களில் இங்கிருந்து என்னை ரயிலேற்றி விடுவார்கள். ரயிலேறிவிட்டேனானால் அதன்பின் மறுபடி எப்பெப்போ உன்னைச்சந்திப்பேனோ. அதனால் போவதற்கு முன்பாக இன்னுமொரு கதை உன்வாய் வக்கணையாக உன்னிடம் கேட்டுச் சுவைத்து ஏகத்தணியாத வேட்கை உற்றனன்' என்று தென்னையாரிடம் என் உள்மனத்தை மெல்ல வெளிப்படுத்தி மேலும் சொன்னேன்.

ஆனால் தென்னையாரோ மிக்க விழிப்பாக இருந்தார் போல 'ஊஹூம்! அது நடக்காது தம்பி!' என்று கப்சிப் மௌனம் சாதித்து முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டார். 'லொட்'டென ஒரு சிறு குரும்பை பட்டெனத் தலையில் தாக்கிய அதிர்ச்சி. அதனை ஆற்ற தலையைத் தடவிக்கொண்டே சில வேளை அந்நிலையாகத் தென்னையாரின் பரிதாப கவனத்துக்குப்பாத்திரனாய் அங்கு உட்கார்ந்திருந்தேன். இன்னும் சில வேளைக்குள் ஒரு வேளை அருணோதய எழுச்சியுடனே கதைசொல்வதற்கு அமைப்பான 'மூட்' தென்னையாருக்கு உண்டாகக் கூடும் என்று அந்தவகை தருணத்தையும் எண்ணி எதிர்பார்த்தவனாகத்தான் அவ்விதமாகப் பொறுமையுடனே காத்திருந்தேன்.

மெல்லென வீசிய காலை இளங்காற்றுடனே அந்நேர மட்டில் உறங்கிக்கிடந்த சமுத்திரம் மெதுவாக அலை அடித்து ஆர்ப்பரிக்க தென்னையார் சிறிதே அசைந்தாடினார். கால்மணிப் பொழுதுக்கொன்றாகக் கூக்குரல் குழலோசை எழுப்பி மேலும் கீழுமாக ஓடிமறையும் ரயில் வண்டிகளும் பின்னால் அவற்றைத் துரத்திக்கொண்டு ஓடும் மாந்தரும் அப்பால்பெருந்தெருவில்கண்மறைவில் இதேபோல் நடப்பன ஓடுவனபறப்பனவற்றின்பேரொலியுமாக அருணோதய எழுச்சியின் சனசந்தடி ஆரவாரம் எங்கும் தலைதூக்கியிருந்தது. காலை இளங்காற்றில் தலை அசைந்து ஆட்டம்போட்டு நின்ற தென்னையார் இப்பொழுது இளநீர்ப் பருவமானதொரு குரும்பையை எனக்கு நிவேதித்தாற் போல இன்முகம் காட்டிப் பேசலானார்;–

'இனி நீதான் எனக்கு ஒரு கதை சொல்லி என்னை மகிழ்வித்து தித்திப்பான இளநீர் பருகி விடைபெறவேண்டும் மகனே! வடக்கே தொலைதூரமாக உள்ள உன்னூர் மண்மணம் விசும் கதை ஒன்று சொல் தம்பி ஆசைப்பட்டுக் கேட்கிறேன். சொல்லு!- ஆசைபெற விழித்துக் கனிந்த தென்னையார், 'ஏன் தம்பி உங்கள் ஊரிலும் தென்னைமரம் உண்டல்லவா?' என மேலும் ஒரு வினா எழுப்பி நிற்பார்.

ஏறு தென்னையார் மெத்த உசக்கப்போய் விட்டாரே. அண்ணாந்து தொண்ணாந்திருந்தாலும் என் வழிக்கு வசப்படுத்தமுடியாது போலிருக்கே என்று மனதுக்குள்ளாக எண்ணினேன் என்றாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமலே 'தென்னைமரம் எங்கள் ஊரிலும் உண்டு தென்னவரே. ஆனால் இங்கு போல் அவ்வளவு பெருந்தொகைத் தோப்பும் வனமுமாக இல்லைத் தான். அதற்கு மாற்றாக கற்பகதருவாம் பனைகளை ஆயிரம் பல்லாயிரமாக அங்கெல்லாம் கண்குளிரப் பார்க்கலாம். கிராமங்களில் கிராமத்தவர் குடியிருப்பு மத்தியில் அங்கங்கு வீட்டோரமாகவும் நீர்நிலைகளான கிணற்றோரமாகவும் ஆழ்மலி அருவி நீர் உண்டு.

வானுற வளர்ந்தோங்கி நிழலும் பொழிலுமாகக் கவரி வீசும் தென்னைகள் எங்கள் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளன. அவை தோட்டப்புலங்களையும் மக்கள் குடியிருப்பையும் எழில்பெற அணிவித்து நிற்பன. அந்தப் பத்துப் பன்னிரண்டு தென்னைகள்-தரும் மதுரமான இளநீர்ப் பானம், போல அவை கூறும் கதைகளும் மதுரசுவை அதி மதுரசுவை உடைத்து அக்கதைகளிலே காதல், சோகம், துயரம், கண்ணீர், மகிழ்ச்சி எல்லாமே பெருக்கெடுக்கும். தென்னோலைக் குடிசைகளின் கீற்றுகளினூடே பொன்னொளிர்த் துளிகளாக விழ்ந்து ஒளியைச் சிதறும் சந்திரிகையின் மயக்கம், தெங்குக்காயில் வடித்த எண்ணெயிலே தோய்த்தெடுத்த பட்சணங்களின் நாவுக்கினிய தித்திப்பு, மாய இருள் நீக்கி ஒளியினைக் காட்டும் அகல் விளக்கு, கண் சிமிட்டும் தீப வரிசைகளில் தோற்றும் மனோரம்மியம்–ஈதனைத்தும் அக்கதைகளிலே உள.' என நீள இயம்பி என் கருமமே கண்ணாக என் காரியமே கருத்தாக பேச்சுத் தொடுத்தேன். மேலும் 'நீதான் அச்சுவேலித் தென்னை மரமாக இப்படி நெடு நெடென்று வளர்ந்தோங்கி நிற்கிறியே அண்ணாச்சி, ஒருக்கால் எங்களூர்ப்பக்கமாகவும் எட்டிப்பார்த்தால் என்ன வாம்?' என்றதற்கு 'யாழ்ப்பாணத்து ஆட்களைத்தான் இங்கேயே தினமும் பார்க்கிறேனே. ஆனி ஆடி மாதங்களில் கதிர்காமம் கொடியேறிவிட்டால் ஆயிரக்கணக்கானோர் யாத்திரைக் கோலத்தில் முருக நாமமே ஜபமாக நெடுந்தூரம் ரயில் பயணம்செய்து வந்து இவ்வழியாகத்தானே மாத்தறை வரை ரயில் பயணத்தை மேலும் தொடருகிறார்கள். இங்கெல்லாம் தொண்டர் சபை அவர்களுக்காகக் காத்திருந்து இளநீரும்பழங்களும்கொடுத்து அன்பாக உபசரித்து வழி அனுப்பும் கதிரமலையானின் ஆடி உற்சவம் கண்டு திரும்பும் மார்க்கத்தில் அவர்களில் பலர் கொழும்பு நகரில் சில தினம் தங்கி ஆடிவேல் விழாவும் பார்த்து வழிபட்டுக்கொண்டு அதன் பின் ஊர்திரும்புவார்கள். இந்தவிதமாக யாழ்ப்பாணத்து ஆட்கள் என் நினைவில் நிலைக்கும்படியாக நெடுங்காலமாய் நன்கு பழகிப்போனவரே. வெள்ளவத்தையை ஒரு தமிழ் கோட்டமாக நிரப்பிவிட்டிருக்கிறார்கள். அதனால் இங்கெல்லாம் யாழ்ப்பாணம் புகையிலைச் சுருட்டுப்புகை இராப்பகலாய் ரயில் இஞ்சினோடு போட்டியாக மணம் பரப்பிக்கொண்டு எழும்...உங்கள் ஊரிலேவீட்டைச்சுற்றிலும் கோட்டை மதில்கட்டி எழுப்பினைப்போலே இரண்டுஆள்உயரத்துக்குவேலிஅரண் அமைத்திருப்பார்களாமே!" என அதிசய வினா எழுப்பி மேலே பேசுவதற்குத் தயங்குகிறார் தென்னையார். அவ்விதமாய் தயங்கினாரிடம் "அதனாலென்ன தென்னவரே வீடுகளினுள்ளாகப் பார்வையைச் செலுத்தமுடியாவிட்டாலும் வெளியேநின்று காது கொடுத்தேனும் தமிழ் பெரும் குடிமக்களின் வாழ்க்கைச் சுவைப்பினை செவியாரக் கேட்டு அனுபவிக்கலாம். குடும்ப மகளிர் விடியற்காலை எழுந்திருந்து சமயல் கட்டுமுற்றத்தில் பாத்திரங்களைத் தேய்த்து மினுக்கி கழுவி சுத்தம் செய்வார்கள். விளக்குமாறு ஏந்தி வீடு வாசல் பெருக்குவார்கள். அப்போதெல்லாம் அவர்தம் கைவளையல் குலுங்கிக் கலீரிடும். அவ்வோசை கேட்பதற்குஇனியது, நும்மை மகிழ்விக்கும்" என்றேன்.

"வளையல் ஒலி, விளக்குமாறு அதெல்லாம் என்ன தம்பி?" தென்னையார் விளக்கம் கோரினார்.

"கைவளையல் தமிழ் பெண்கள் கைகளிலே அணியும் ஆபரணம். விளக்குமாறு தென்னோலையில் வார்ந்தெடுத்த ஈர்க்குக் கற்றை. அதைக்கொண்டு தான் தினமும் வீடுவாசல் பெருக்கிச் சுத்தம் செய்வார்கள். அதுவும்கூட குடும்ப மகளிர் கைக்கு ஒரு சிறப்பான அணிதான். தென்னிலங்கை கிராமப்புற சிங்களப் பெண்களிடம் இயற்கையாக வளர்ந்திருக்கும் நீண்ட கூந்தலைப் போல எங்களூர் புதுவிளக்குமாற்றுக் கற்றைக்கு அதன் நுனிப்பாகத்தோகை அமைந்திருக்கும்"-நான் சொன்னேன்.

இத்தனையும் கேட்டறிந்துகொண்டு தென்னையார், "அடடே உங்களூர் வீட்டுத் தென்னைகளைத் தழுவி இவ்வளவு கதை இருக்கா. உங்களூர்த் தென்னைகளுக்குக்கூட வாயிருக்கா, பேசுமா, அவை சுவையான கதையும் சொல்கிறதா அதிசயமாயிருக்கே! உன்னுட ஊர் எது தம்பி? இதோ இந்த ரயில் பாதையோடே போய்..." என்று அங்கலாய்த்தார்.

"போய்...போய் ... நெடுந்தூரம், சுற்றுவழி; அதெல்லாம் எதற்கு? தபால் விலாசம் சுன்னாகம் என்று வைத்துக் கொள்ளேன்."

"ஓகோ! சுன்னாகம் தபால் கோட்டமா? மெத்த நல்லது. அப்ப நீ ரயிலேறி ஊருக்குப் பயணப்படுவதற்கு முன்னமாக உன்னூர்க் கதை ஒன்று சொல்லி என்னை மகிழ்வித்து ஏகுவாய் அல்லவா? வெய்யில் ஏறுகிறது. போய் மாலை திரும்பு, காத்திருப்பேன்" தென்னையார் இனிதாகப்பேசி விடைகொடுக்க அன்றைய காலைச் சந்திப்பு இந்த விதமாக முற்றுப்பெற்று நான்என்வசிப்பிடம் திரும்பலானேன்.

அன்றெல்லாம் கதை சொல்லும் திறன் சிறிதளவேனும் சித்திக்கப்பெற்றிருக்காத (ஏன்– இன்றைக்கும் கூடத்தான் என்னை எங்காவது ஒருமேடையிலேற்றி நாலு வார்த்தை புனைந்துரையாக 'கதை' வழங்க அழைப்புவிடுத்து வருவோர் முடிவில் ஏமாற்றத்துடனே திரும்பிப்போகும்போது இதே மனக்கருத்துடனே போனதைப் பலதடவை கண்டும் காதாரக்கேட்டுமிருக்கிறேன்.) ஒரு பள்ளி மாணவன் தானே நான். தென்னவர்கோனுக்கு என்ன கதையைச் சொல்வேன். நிலா முற்றத்தில் எங்கள் வீட்டுப் பாட்டியம்மாவிடம் சிறு பராயம் முதலாக கதை கேட்டு கல்பனைலோக சஞ்சாரம் செய்து அவ்வின்பத்தில் திளைத்த செவி இன்னமும் அதேபோல் பிறரிடம் கதைகேட்டின்புற துணிந்ததேயன்றி நம்மூர் வெயிலும் மழையும் 'போட்டுப்பிடிக்க' நாலுபேர் சுவைக்கும்படியாக ஒன்றினை நயம்பட புனைந்துரைக்கும் திறனைக் கிரகித்ததில்லை, கற்றுக்கொண்டதில்லை. இதே விசாரமாகச் சில தினங்கள் கண்கள் உறங்கவில்லை. கடற்கரைப் பக்கம் அந்தத் திசைக்கே யான் போவது தவிர்த்தொழித்தனன்.

வளையல் 'ஒலியினையும் நம்மூர் விளக்குமாற்றினையும் சரிவரத் தெரிந்துகொள்ளமுடியாதநிலைவசத்தராகத் தென்னவர்கோன் முடத்தெங்கார் அதுகுறித்து சங்கடமான வினாக்கள் எழுப்பி என்னைத் துளைக்காமல் விட்டாரே அந்த மட்டில் அவர்வாய்மூடிமௌனமாக இருந்தது நல்லதாய்ப் போச்சு. அதல்லாமல் விடியற்காலை எழுந்திருந்து வீட்டுவேலைகளில் ஆழ்ந்துபோகும் உங்களூர்ப் பெண்மணிகளிடம் அதுசமயம் என்னவோ கணீரிடும் கலீரிடும் என்றெல்லாம் உளறுகிறாயே. அவர்களென்ன அதுசமயம் சதிராடிக் குதித்துக்கொண்டா தினமும் தங்கள் குடித்தன காரியங்களில் அவ்விதமாக ஈடுபடுகிறார்கள் என்று ஐயம் தெளிவுற ஏதும் கேட்டிருந்தால் அதற்கு நான் ஆதியோடந்தமாக எவ்வளவு விளக்கம்தரும்படி ஆகியிருக்கும்.

இரண்டு மூன்று தினங்களாகக் கண்கள் உறங்கவில்லை என்றேனா? அந்த உறக்கமற்ற இரவுகளில் பெரும்பிரயத்தனப்பட்டு ஒரு கதை எழுதினேன். யாவும் கற்பனையாக எழுதிமுடித்த அக் கதையின் எழுத்துப் பிரதியை ஒரு புத்தகத்தினுள் மடித்தெடுத்து வைத்துக்கொண்டு ஒருதினம் மாலை கடற்கரை நோக்கி நடந்தேன். கடற்கரையில் அன்றையதினம் இன்னும் கூட்டம் சேரவில்லை. முடத்தெங்காருடனே இணைந்த கல் ஆசனமும் இன்னும் யாராலும் கைப்பற்றப்படாது வெறுமனே கிடந்தது. வந்த வேளை நல்லவேளை ஆயிற்று என்று மனதுக்குள்ளாக எண்ணிக் களிப்புற்றேனாய் அவ்வாசனத்தே ஓடிச்சென்று அமர்ந்தேன். சமுத்திரம் மெல்ல மெதுவாக அலையடித்து, சலனமற்றிருந்த தென்னையின் கீற்று சலசலத்திட அசைந்தது. கையிலிருந்த புத்தகத்தை விரித்து அதற்குள் மடித்து வைத்திருந்த எழுத்துப் பிரதியை என் மனதுக்குள்ளாக வாசிக்கலானேன்.

எங்களூர் வண்டில்காரர் கந்தையாவை அவருடைய

(7-ம் பக்கம் பார்க்க)




## நெய்தல் அழகு

கடலொன்று கரையொன்றிக் கண்டேன்-அதன்
கனிவான வியல்கொண்ட கவின் மாட்சியென்னே
நிறமென்ற நீலத்தின் சாயல்-கடல்
நிலைக்குத்து உயரத்தில் விதத்தினில் வேறு
நீரினில் ஏற்பட்டதல்ல-விரி
நீணிற வாகாய நிழல் பட்ட அழகே
அலையென்ற புரள் நீரினசைவு-முத்து
அடுக்கான இரத்தினமூ சொன்றினற்போல்
விசைகொண்டு வரு நேரமதிலே-விண்ணை
விரைந்தேதொடுகின்ற நிலைகண்டு நின்றேன்
மரக்கலம் உருதோணி வள்ளம்-வரி
மரக்கட்டு இவையாவும் மலைபோல் மிதந்து
பலதிக்குமிசைவாகப் போதல்-மண்ணில்
பலசான்றும் உவமைக்கு நிகர் நேரிரில்லை
நிறமேற்ற ஒரு கோடி மீன்கள்-நீரில்
நிலையான பெயர் கொண்டு இனத்தாற் பிரிந்தும்
திரையென்ற தாயோடு சேர்ந்து-நித்தம்
திணிவான மனதோடு நிரையாக வருமே
கடற்பாகி யதனோடு சேர்ந்த-பல்
கவின் கொண்ட பைந்தாட்கள தாவரங்கள்
விதங்கொண்ட பல்வேறு ஊரி-நல்
விளைமுத்து வேர்சிப்பி வெண்சங்கு சோகி
பவளங்கள் பூக்கல்லு முருகை-இன்னும்
பல்வேறு உயிர்கொண்ட இனச்சேனை கண்டேன்
கரைசேர்ந்த மீனினம் என்னே-அவை
கனிவான முறைசேர விலைபோகுமழகு
இனிவான கயல் போன்ற விழிசேர்-மங்கை
இயைபாக அவை விற்றல் உயர்வான முறைதான்
அயல் மண்ணில் நீர் முள்ளி தாழை-இன்னும்
அடுக்காகக் கொடி நீண்டு வழகியுமடம்பன்
அலையென்ற குழி தோண்டி நண்டு-நிதம்
அயராது படங்கீறு மழகென்ன சொல்வேன்
இது தாரி னினிதான நியதி-என்றும்
இறை தந்த பெருவாரி உயர்வான நிதியம்.

–எழினி– சி. சிவநாதபிள்ளை



# தாமரைமலரை ஓவியர்கள் பிழையாக வரைகிறார்கள்!




ஆரம்பகால ஓவியர்கள் முதற்கொண்டு உலகப்பிரசித்திபெற்ற இந்திய ரவிவர்மா தொடக்கம் [இலங்கை] புகழ்வாய்ந்த ஓவியர்கள் வரை தாமரை மலரை அதன் இயற்கையான அமைப்பை மாற்றி ஒரு சர்ச்சைக்குரிய செயற்கை மாதிரியில் சித்திரமாக (கற்பனைச் சித்திரம்) வரைந்துவருகிறார்கள். இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால் ஓவியக்கலையில் ஈடுபடும் எதிர்கால சந்ததியினரையும் இந்தப் பிழையான மாதிரியைப் பின்பற்றச்செய்வதாய் இருக்கும்.

ரவிவர்மாவின் (தாமரை மலர்) சரஸ்வதி, இலட்சுமி போன்ற தெய்வங்கள் வீற்றிருக்கும் மலர்களாக அமைப்பிலும் ஓவியங்களிலும் இந்தப் பிழையைக் காணமுடிகிறது. இந்தப் பிழையைச் சுட்டிக்காட்டும் போது அதே வழியை பின்பற்றி வந்த இதர ஓவியர்களும் தங்களது பிழையை உணர்ந்து திருந்தமுடியும். ரவிவர்மா புகழ்வாய்ந்த ஓவியராக இருந்தபோதும் இயற்கை உருவையும் கற்பனை உருவையும் ஒன்றாக இணைத்து வரையும்போது இத் தவறு நிகழ்ந்துள்ளது.

உண்மைக்கலைஞன் பிழையை சுட்டிக்காட்டி உண்மையை உலகுக்கு உணர்த்தவேண்டுமென்பதற்காக இச் சர்ச்சைக்குரிய விடயத்தை இங்கு விளக்க விரும்புகிறேன்.

உரு 2 இல் காட்டப்பட்டுள்ள தாமரை மலர் இது வரைகாலமும் பிரபல ஓவியர்கள் முதற்கொண்டுகையாண்டு வரும் அமைப்பாகும்.

உரு 2 இல் அ. ஆ. இ. என்று சுட்டிக்காட்டப்பட்ட அமைப்புக்களை அவதானிப்பின் அங்கே விடப்பட்டுள்ள பிழைகள் உள்ளங்கைநெல்லிக்கனி போன்று விளங்கும்.

இதை மேலும் துருவி ஆராயும் வகையில் உண்மையான



ஆசிரியர் சி. சுந்தரலிங்கம்

ஒரு தாமரைப்பூவை நாம் எடுத்துப் பார்ப்போம். ஆனால் உரு 2 இல் அ. ஆ. என்னும் எழுத்துக்களால் அடையாளம் இடப்பட்டுள்ளது போல தாமரைமலரிலிருந்து அவ்விரு இதழ்களும் மலர்வரிசையை விட்டு வெளிப்பாங்காக நிற்பதைக் காணமுடியாது. இதேபோன்று இம்மலரில் இ. ஈ. என்ற எழுத்துக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அமைப்பைப் போன்று உண்மையான தாமரை மலருக்கு முரணாக எதிரும் புதிருமாக இதழ்கள் அடுக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. உண்மையான தாமரை மலரில் இப்படியான அடுக்கைக் காணமுடியாது.

தவறுகளை நாம் தொடர்ந்து விடுவோமானால் தாமரை மலரின் இயற்கைத் தன்மை ஒருமாதிரியும் சித்திரத்தில் வேறுமாதிரியும் மட்டும் அல்ல தாமரை மலர்கள் முரண்பாடான ஒரு மரபை தொடர்ந்து நீடிக்கச்செய்வதாகிவிடும். தாமரை மலர் காலகதியில் அழிந்துபோகுமானால் போலிவடிவமான உரு 2 இல் காட்டப்பட்டுள்ள அமைப்பையே நாம் நிலைநிறுத்தியதாக முடியும்.

ஆகவே நாம் இருக்கும்போதே உண்மையை உண்மை வடிவில் வெளிப்படுத்தி இந்த முரண்பாட்டை நீக்கவேண்டும்.

தாமரையின் உண்மையான வடிவம் உரு. 1 இல் காட்டப்பட்டுள்ளதுபோல தோற்றமளிப்பதைக் காணலாம்.

எனவே தாமரைப்பூவை படமாக வரையும் கலைஞர்கள் நமக்கு முன்பு இருந்தவர்கள் வரைந்த மாதிரிகளையே மரபாகப் பின்பற்றுவதைவிடுத்து தாமரையின் உண்மை வடிவத்தையே சித்திரமாக வரைய முன்வரவேண்டும். இது எதிர்காலக் கலைஞர்களுக்கு ஒருவழிகாட்டலாகவும் அமையும்.

# ஒளி பிறந்தது

திரு. ச. ஹ. பேரின்பநாயகம்
(முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

'கனவு நனவாகியது—காங்கேயன் கோட்டத்தில் அதுவே ஒளிபிறந்த கதையுமாயிற்று' என ஓர் இனிய வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக முதுபெரும்ஆசிரியமணி திரு. ஹண்டி பேரின்பநாயகம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 1971-76 வெளியீடாக அண்மையில் மலர்ந்த 'ஜயரத்தினம் மாட்சி விதப்பு இதழில்' எழுதியுள்ளார்.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வி பிறநாட்டுக் கிறித்தவச் சங்கங்களின் வல்லாட்சிக்குட்பட்டிருந்தது. நடைமுறையிலிருந்த அரசியற் சூழலில் பெற்றோரோ மாணவரோ அக்கல்வி முறை வழங்கிய நன்மைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. பௌத்தர்களும் சைவர்களும் தங்கள்பிள்ளைகளைக் கிறித்தவப் பாடசாலைகளுக்கு அனுப்பியதோடு அவர்களை மதம் மாறவும் அனுமதித்தனர். இக்கல்விமூலம் பெறப்பட்ட உலகியல் நன்மைகள் சமய நம்பிக்கைகளைவிட உயர்ந்ததாகக் கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். அக்காலத்தில் உயர் கல்வி என்பது ஆங்கில (மொழி மூல)க் கல்வி எனக் கருதப்பட்டது. எனவே பௌத்தர்களும் சைவர்களும் உயர் கல்வி பற்றிச் சிந்தித்தபோது ஆங்கில மொழிமூலக் கல்வி நிலையங்களை நிறுவவேண்டுமென்றே கருதினர்.

அரசு தன்னை மதச் சார்பற்றதாகக் கூறிக்கொண்டபோதிலும் கிறித்தவ மிஷனரிகள் பிரதானமாக புரட்டத்தாந்து மிஷனரிகள் தமக்குவேண்டியவற்றையெல்லாம்முன்னுரிமையோடு அரசிடம் பெற்றுக்கொண்டன. பௌத்த இந்து நிலையங்களினால் நடாத்தப்பட்ட கல்வி நிலையங்களின் வளர்ச்சியைத் தடுக்கவும் அவர்களால் முடிந்தது. எனினும் ஆனந்தாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி போன்ற பெரிய கல்லூரிகளும், ஸ்கந்த வரோதயா, மகாஜனா போன்ற சிறிய கல்லூரிகளும் மத உரிமைகளை இழக்காமலே சைவ, பௌத்த மாணவர் உயர்கல்வி பெற இடையறாது போராடி வெற்றிகண்டன.

பின்னாளில் தெ. அ. துரையப்பாபிள்ளை ஆன சா. க. து. தெயிலர் அவர்களே கிறித்துவப் பெற்றோரின் வழித்தோன்றல்; கிறித்துவக் கல்லூரியால் உருவாக்கப்பட்டவர். கிறித்தவப் பாடசாலையின் தலைவராக இருந்தவர். எனினும் பேரறிஞராக விளங்கிய அவர், தமது காலத்தில் கிறித்தவப் பாடசாலைக்குத் தமது பிள்ளைகளை அனுப்பிய சைவப்பெற்றோர் அதனால் உற்ற பேரிழப்பை அறிந்தார். எனவே அவர் மிஷனரிகளோடு முரண்பட்டுப் பிரிந்து சென்று தாமே ஒரு பாடசாலையை நிறுவினார். அக்காலத்தில் இது போட்டிப் பாடசாலை (Opposition School) எனப்பட்டது.

துரையப்பாபிள்ளையின்கனவு நனவாகியதன் விளைவாகவே மகாஜனக் கல்லூரி புதிய காலகட்டத்தின் தேவைகளை உணர்ந்து, கணிப்பிட்டு மதிப்பிட்டுப் பாடசாலையைக் கட்டி எழுப்பும் பணி அவரது புதல்வர்மீது சுமத்தப்பட்டது. தந்தை மூட்டிய கல்விப்பணியைப் பத்துமடங்கு பெரிதாக்கிய பெருமை ஜயரத்தினம் அவர்களைச் சாரும். ஜயரத்தினம் யாழ்ப்பாணக் கல்லூரியில் சிறிது காலம் எனது மாணவராக இருந்தார். அந்நாளில் என்னை மிகவும் கவர்ந்தது தந்தைக்கும் மகனுக்குமிடையே காணப்பட்ட வேறுபாடாகும். துரையப்பாபிள்ளை சைவர்களின் கல்விக்கும் சைவ கலாசாரத்துக்கும் சமராடிய போர் வீரராகவும் பிரசாரகராகவும் விளங்கினார். ஆனால் ஆடம்பரமற்ற அமைதியான

[7-ம் பக்கம் பார்க்க]

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி-7

# தண்டனை

(முன் தொடர்ச்சி)

வைத்தி: ஐயோ...பொலிஸ் வருகுது...நான்என்ன செய்ய...

தங்கம்: பயப்படவேண்டாம்...முன் கதவைப் பூட்டு... பின்கதவாலை ஓடு...

முத்தை: அப்ப...நீ என்ன செய்யப்போறாய் தங்கம்...

தங்கம்: ஏன் எனக்கென்ன... என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்...நீ தப்பி ஓடு...

முத்தை: (போய்க்கொண்டு) நான் போறன் தங்கம்...

தங்கம்; இது என்ன...காசு... ஆ...ஆரக்கணக்கிலை இருக்கும்...போலையிருக்கு. அவசரத்திலை வைத்திலிங்கம்தான் வைச்சிருக்கவேணும்... அதுகும் நல்லதுக்குத்தான். இதை மறைச்சுவைப்பம்...

(கதவு தட்டும் சத்தம்)

பொலிஸ்: ஆர் வீட்டிலை... கதவைத் திறவுங்கோ...

(கதவு திறக்கும் சத்தம்)

தங்கம்: ஓ...பொலிஸ் ... என்ன வேணும்...

பொலிஸ்: இந்த வீட்டிலை கொலை நடந்திருக்கிறதாகத் தகவல் கிடைச்சிருக்குது. அது தான் வந்திருக்கிறன்.

தங்கம்: கொலையா...

பொலிஸ்: தங்கம் எண்ட பெண் கொலைசெய்யப்பட்டிருக்கிறதாக டெலிபோன் மெசேஜ் கிடைச்சுது.

தங்கம்: (சிரித்து) நான்தான் தங்கம்...நான் உயிரோடை தான் இருக்கிறன்...

பொலிஸ்: இங்கை வேறை ஆராவது...

தங்கம்: என்னைத் தவிர இங்கை வேறை ஒருதரும் இல்லை...என்னைக் கொலைசெய்யிறதுக்கு முயற்சிநடந்தது உண்மைதான். ஆனால் நான் சாகவில்லை.

பொலிஸ்: ஆர் கொலை செய்ய முயற்சிசெய்தது...

தங்கம்: ஆரோ ஒருகோழை... அவன் ஆரெண்டு எனக்குத் தெரியாது...

பொலிஸ்: காயம் பெரிசா...

தங்கம்: இல்லை ... இரண்டு நாளிலை ஆறிப்போற காயம் தான் இது. கத்திக்குத்து பட்டதுமே நான் செத்ததுபோலை விழுந்திட்டன். அவன் பயந்து ஓடிவிட்டான்.

பொலிஸ்: ஆளைக் கண்டால் அடையாளம் காட்டமுடியும் தானே உன்னாலை...

தங்கம்: முடியும்...

பொலிஸ்: சரி நாங்கள்... வாறம். நீங்கள் பொலிஸ் ஸ்டேஷனுக்கு எங்களோடை வந்து ஒரு கொம்பிளெயின்ட் குடுங்கோ...

(ஜீப் போகும் சத்தம்)

(இசை)

வைத்தி: (வந்துகொண்டே) முத்தையா...எத்தனை நாளைக்குத்தான் நீ... ஒழிச்சிருக்கமுடியும்...ம்...எங்கை என்னுடைய காசு பத்தாயிரம்...

முத்தை: என்னது பத்தாயிரமா...வைத்திலிங்கம் என்னோடை விளையாடிறியா?

வைத்தி: உன்னோடை எனக்கென்ன முத்தையா விளையாட்டு. எங்கை காசு...

முத்தையா: என்ன காசு...

வைத்தி; தங்கத்தைக்கொலை செய்ததை மறைக்க... நான் உனக்குத் தந்த காசு பத்தாயிரம்...

முத்தை; தங்கம்தான் சாகவில்லையே...

வைத்தி: அதினாலைதானே பணத்தைத் திருப்பிக்கேட்கிறேன்...

முத்தை: வைத்திலிங்கம் உண்மையைச் சொல்லிறன்... நான் உன்னுடைய காசைத்

“வரணியூரான்”

தொடவேயில்லை...நீ போய்க் கொஞ்சநேரத்தாலை ... தங்கம் உயிரோடை எழும்பிப் பேசத் தொடங்கிவிட்டாள். அதுக்கிடையிலை பொலிஸ் வந்திட்டுது. நான் பணத்தையும்விட்டிட்டுப் பின்பக்கத்தாலை ஓடித் தப்பிவிட்டன்.

வைத்தி: நான் தான் பொலிசை அனுப்பினது...

முத்தை: எதுக்காக நீ பொலிசை அனுப்பினாய்...

வைத்தி: வேறை எதுக்கு. உன்னைக் கைதுசெய்யத்தான்...

முத்தை: என்னை எதுக்காகக் கைதுசெய்யவேணும்...

வைத்தி: தங்கத்தை கத்தியாலை குத்தினதுக்காக.

முத்தை: அடபாவி... தங்கத்தை நானா கத்தியாலை குத்தினன்...

வைத்தி: சரி ... சரி ... அது பழங்கதை...இப்பு எங்கை என்னுடைய காசு...

முத்தை: சத்தியமாக எனக்குத் தெரியாது...நான் திரும்பி வந்து பார்த்தபொழுது காசுமில்லை...தங்கமுமில்லை...

வைத்தி: எனக்குக் கதை சொல்லிறியா...இதை நான் நம்பவேணுமா...

முத்தை: நம்பாட்டால் போடா...ஆகவுந்தான்வெருட்டிப் பார்க்கிறாய்...

வைத்தி: என்னைப் பார்த்தா போடா எண்டு சொன்னாய்... (கன்னத்தில் அடி விழும் சத்தம்) என்னுடைய கால்தூசி பெறாத நீ என்னைப் பார்த்துப் போடா என்று சொல்லுறாய்...

முத்தை: என்ன இது...என்னைக் கை நீட்டி அடிச்சுப் போட்டு... சன்மானம் தாறியா...உன்னுடைய காசு எனக்குத் தேவையில்லை...

வைத்தி: என்னைப்பற்றித் தவறாக நினைக்கவேண்டாம் முத்தையா... நான் கொஞ்சம் முற்கோபி... அவ்வளவுதான்... இதை வைச்சுக்கொள்...

வைத்தி: அது போகட்டும்... தங்கம் இப்ப எங்கை...?

முத்தை: வைத்திலிங்கம்... நீ இன்னும் என்னை நம்பவில்லையா... தங்கத்தைப்பற்றி எனக்கு ஒரு விபரமும் தெரியவே தெரியாது...

(ஜீப் வண்டி வரும் சத்தம்)

வைத்தி: ஐயோ... ஐயோ... கொள்ளை... பகல்கொள்ளை ... என்னுடைய பணத்தைப் பறிச்சுக்கொண்டு ஓடுறான் ... பொலிஸ் ... பொலிஸ் ... பிடியுங்கோ இவனை... ஓடுறான்...

(ஜீப் நிற்கும் சத்தம்)

பொலிஸ்: நீ பகல்கொள்ளை அடிக்கிறியா...ஏறு ஜீப்பிலை...

முத்தையா: ஐயா...ஐயா... இது அநியாயம் ஐயா ...நான் இதைப் பறிச்சுக்கொண்டு போகயில்லை ஐயா...இவர்... இவர்தான் தந்தார்...

வைத்தி: ஆ... எனக்கு இவனை முந்திப் பித்தித் தெரியக்கூட மாட்டுது... நானேன் குடுக்கிறன்.

முத்தை: ஐயா... ஐயா... நான் பிள்ளைகுட்டிக்காரன் ஐயா...என்னை விட்டுடுங்கோ ஐயா...

பொலிஸ்: பிள்ளைகுட்டிக்காரன்...ஏன் களவுவேலைக்குப் போகவேணும்.ம்...ம்...ஏறுஜீப்பிலை .. சொல்லவேண்டியதுகளை ஸ்டேசனிலை வந்துசொல்லு. நீங்களும் ஏறுங்கள் மிஸ்டர்...

(ஜீப்போகும் சத்தம்)

(இசை)

# மரணம் ஏற்படும் போது ஆன்மா' வெளியேறுகின்றதா?

மனிதன் இறந்ததும் அவனுடைய ஆன்மா அல்லது ஆவி அழியாமல் இருக்கின்றதா? அவ்வாறாயின் உடலிலிருந்து ஆவி பிரிவதைப் பதிவுசெய்யமுடியுமா?

ஆவி அல்லது ஆத்மா உடம்பைப் போல் அழிவதில்லை என்பதுவே சமயங்களினதும் தத்துவங்களினதும் தொல்கால நம்பிக்கையாகும்.

இதனை விஞ்ஞான முறையில் நிருபிக்கமுடியுமா?

ஆம், அதற்கான பல பரிசோதனைகளை நடத்தி நிருபிக்க முயன்றவர்களில் முன்னோடியாக நின்றவர் டாக்டர் டங்கன் மாக் டகோல் என்பவராவார். அமெரிக்காவில் மஸசுசெட்ஸ் ஆஸ்பத்திரியில் பிரதம வைத்திய அதிகாரியாக அவர் இருந்தார்.

ஆன்மா அல்லது ஆவியானது ஸ்தூல சரீரத்துடன் தொடர்புடையதாகவும், அச்சரீரம் உயிர் வாழும் காலத்தில் அதன் செயல்களுடன் இணைந்து செயல்படுவதாகவும் இருப்பதனால் அதற்கு ஒரு சிறு அளவிலாகுதல் ஸ்தூல அம்சம் இருக்கவேண்டும்; அவ்வாறாயின் அதற்கேற்றாற்போல் சிறு அளவிலாகுதல் பாரம் இருக்கவேண்டும் என்று அவர் நம்பினார். அவ்வாறு ஆன்மா அல்லது ஆவிக்கு சிறிதளவாகிலும் பாரம் உண்டாயின் அதனைக் கண்டுபிடித்துவிட முடியும் என்றும் டாக்டர் டங்கன் மாக் டகோல் கருதினார். இதன் அடிப்படையில் அவர் ஆய்வுகளை ஆரம்பித்தார்.

ஆஸ்பத்திரிகளில் மரணத்தை அணுகவிருந்த புற்றுநோய், க்ஷயநோய்க்காரர்களின் ஒத்துழைப்புடன் தமது சொந்தப் பணச் செலவில் இதுபற்றிய முழு ஆராய்ச்சியொன்றை ஆரம்பித்தார்.

இதற்காக மிகவும் சரியாக இயங்கும் மேடைபோன்ற அமைப்புடைய ஒரு தராசை விலைக்கு வாங்கினார். ஓர் அவுன்ஸின் பின்னமுறையில் செயல்படக்கூடிய தாகவும் இலக்ட்ரோனிக்முறையில் கட்டுப்படுத்தக்கூடிய தாகவும் அதனை மாற்றி அமைத்தார்.

க்ஷயரோகத்தினால் மரணமாகவிருந்த ஒருவரே இவரது முதலாவது பரிசோதனைக்குட்பட்டவர்.

மிகப் பலவீனத்தினாலும் சக்தி விரயத்தினாலும் மரணமாகும் ஒருவரையே டாக்டர் இங்குதெரிவுசெய்தார். ஏனெனில் இவர்மரணமாகையில் ஒரு கொஞ்சமும்சரீரமோ தசைகளோ அசையாமல் இருப்பின் துலாக்கோல்சமநிலையில் இருக்க முடியும், அதனால் பாரத்தில்

## விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவு

ஏற்படும் வேறுபாடுகளை துல்லியமாக அவதானிக்க முடியும்.

மரணமாகவிருந்த நோயாளி தராசின் மேடை போன்ற பகுதியில் கிடத்தப்பட்டார்.

தராசின் துலாக்கோல் சமநிலையில் 'செட்'செய்யப்பட்டு நோயாளி மிகவும் கவனமாக டாக்டர்கள் குழுவொன்றினால் பரமரிக்கப்பட்டார்.

நோயாளி ஒரு மணிநேரத்திற்கு ஓர் அவுன்ஸ்வீதம் பாரத்தை இழந்துவந்தார். உடலிலிருந்த ஈரத்தன்மையும் சுவாசத்தின்மூலமும் வியர்வை மூலமும் வெளியாகிக்கொண்டிருந்ததே இதற்குக் காரணம்.

3 மணி 40 நிமிடங்களில் நோயாளி மரணமானார். உயிர் போகும் கடைசி நிமிடத்தில் துலாக்கோலானது 'டக்' என்ற சப்தத்துடன் கீழே இறங்கி தடைக் கட்டையில் மோதி நின்றது. அது மீண்டும் பழைய நிலைக்கு வரவில்லை. அவ்வாறு திடீரென ஏற்பட்ட பாரக் குறைவு ஓர் அவுன்சின் முக்கால் பகுதியாகும்.

இதே முறையில் இன்னொரு க்ஷயரோகி தராசின் மீது கிடத்தப்பட்டார். மணிக்கு ஓர் அவுன்ஸ் வீதம் பாரம் இழந்தபடி இவர் 4 மணி 15 நிமிடங்கள்வரை தராசின்மீது கிடந்தார். இவர் உயிர் துறந்தபோது திடீரென குறைந்த பாரத்தின் அளவு அரை அவுன் சாகும்.

இவ்வாறு உயிர் துறக்கும் பல நபர்களை வைத்து டாக்டர் மாக்டகோல் ஆராய்ச்சி செய்தார். ஒவ்வொரு தடவையும் தமது ஆராய்ச்சியில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்தார்.

உயிர் போகும்போது ஏற்படும் பாரக்குறைவைமட்டும் அவர் பதிவுசெய்யவில்லை. சடலம் தராசில் கிடக்கும்போதே பாரக்குறைவை நிறைவுசெய்யும்வகையில் சிறு பொருட்களை தராசின்மேல் வைப்பார். பின்னர்திடீரென அப்பாரத்தை அகற்றுவார். ஆனால் உயிர் போகையில் துலாக்கோல்'டக்' கென இறங்கி தடைக்கட்டையில் மோதிக்கொள்வதுபோல் நடப்பதில்லை. துலாக்கோல் மிக மெதுவாகவே இறங்கும். சில சமயங்களில் ஏழு நிமிடங்கள் பிடிக்கும் துலாக்கோல் இறங்குவதற்கு.

உயிர் போகையில் திடீரென ஏற்படும் பாரக்குறைவு உடலில் உள்ள நீர்த்தன்மை நீராவியாகவும் வியர்வையாகவும் வெளியேறுவதனால் ஏற்படுவதல்ல. அது மெதுவாகவே நடைபெறுகிறது. ஒரு மணி நேரத்துக்கு ஓர் அவுன்சுக்குமேல் இருப்பதில்லை என்பதை அவர் ஏற்கனவே நிருபித்துவிட்டார். குடல் அல்லது வயிற்ன் செயற்பாடு கட்டுப்பாடு இழப்பதனால் திடீரென மலக்கழிவு அல்லது நீர்க்கழிவு ஏற்படுமானால் பாரக்குறைவு ஏற்படமுடியாது. ஏனென்றால் அவ்வாறு ஏற்படும் கழிவு தராசின் மீதே கிடக்கும்.

### எதிர்ப்பு

இவ்வாறு டாக்டர் மாக்டகோல் தாம் மேற்கொண்ட முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி பெற்றுவரும் சமயத்தில் ஆஸ்பத்திரிஅதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்தார்கள். ஆராய்ச்சிக்குவசதிகள் தருவதில் தயக்கம் காட்டினர். இதனால் டாக்டர் மாக்டகோல் தமது ஆராய்ச்சிகளில் கண்ட உண்மைகளை ஒரு வெள்ளை அறிக்கைமூலம் வெளியிட்டார்.

"ஆன்மா எனும் பொருளும் அதுபற்றிய ஆராய்ச்சி உண்மைகளும்" என்ற தலைப்பில் அக்கட்டுரையை வெளியிட்டார். 1967 மே மாதம் அமெரிக்க மனவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையில் இக்கட்டுரை வெளிவந்தது.

அமெரிக்க மனவியல்ஆராய்ச்சிச் சங்கத்தின் அப்போதைய தலைவராகவிருந்த டாக்டர் ஜேம்ஸ் ஹிஸ்லொப் இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டபோதிலும் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

சாதாரணநிலையில் பதிவு செய்யமுடியாத உயிர் பிரிகையில் ஏற்படும் திடீர் எடைக்குறைவை பதிவுசெய்து நிருபித்திருப்பதை ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் அவ்வாறு உடலில் இருந்து நீங்கும் பொருள்தான் ஆன்மா என்பதை இது நிருபிப்பதாகாது"

இந்த வெள்ளை அறிக்கை மனோவியல் ஆராய்ச்சி வட்டாரங்களில்பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. இதில் அக்கறைகொண்டவரான திரு. ஹேவார்ட் கரிங்டன் மேற்கொண்டும் சிறிய மிருகங்களைப் பயன்படுத்தி தொடர்ந்து ஆராயவேண்டும் என்று கருதினார்.

### கண்ணாடிப் பேழையில் ஆவி

நன்றாக இறுக்கி மூடப்பட்ட ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் ஒரு பிராணியை வைப்பது. அதற்குள் காற்றை செலுத்தும் ஒருசிறுகுழாயைமாத்திரம் இணைப்பது; இந்தக் கண்ணாடிப் பெட்டியை இன்னொரு பெட்டிக்குள் வைப்பது, காற்றுக் குழாயை இன்னொருகுழாயுடன் இணைத்து காற்றும் மயக்க வாயுவும் செலுத்தக்கூடியதாக அமைப்பது; இதன் மூலம் காற்று தானாகவே துண்டிக்கப்பட்டு மயக்கவாயு மாத்திரம் கண்ணாடிப் பெட்டிக்குள் செலுத்தப்பட்டு அப்பிராணியை கஷ்டமின்றி சாகடிக்க முடியும். இந்த இரு கண்ணாடிப்பெட்டிகளுக்கு மிடையிலுள்ள இடைவெளியில் நீராவி மாத்திரம் இருக்கக்கூடியதாக அமைக்கப்படும் அப் பிராணி இறக்கும்போது அதன் உடலில் இருந்து ஆவியொன்று வெளியேறுமானால் அது இந்த நீராவி விரும்பிய பகுதிக்குள் வரவேண்டும். ஆன்மா, அல்லது ஆவி என்பது ஏதோ ஒருவித 'சக்தி' என்று கருதப்படுவதால் அதனிடமிருந்து கதிர்கள் வெளியேறுவதாய் இருக்கும். இது நீராவியின் உஷ்ண நிலையை மாற்றி தன்னைச் சுற்றிலும் ஒரு தோற்றத்தை உருவாக்கும்.

இதுவே காரிங்டனின் திட்டம் இது 5 ஆண்டுகளின் பின்னர் செயல்படுத்தப்பட்டது.

எக்ஸ்றே கதிர்நிபுணரும் உயிரியல் விற்பன்னருமான டாக்டர் ஆர். ஏ. வாட்டர்ஸ் என்பவர், இந்தப் பரிசோதனைக்காக வில்சன் மேக்கூடம் என்றழைக்கப்படும் ஒரு கண்ணாடிப் பேழையை பயன்படுத்தினார். இந்தப் பேழைக்குள் எந்தப் பொருள் இருந்தாலும் படம்பிடிக்க முடியும். இந்தமுறையில் டாக்டர் வாட்டர்ஸ அந்தக் கண்ணாடிப் பேழைக்குள் வைத்து நச்சுவாயுக்களை உபயோகித்து சிறு பிராணிகளை கொன்றார். ஆனால் இதில உயிர்பிரியும் சரியான நேரத்தைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. சிலசமயங்களில் பரிசோதனைக்குள்ளான பிராணி மீண்டும் உயிர்பெற்றுவிட்டது. இதனால் அந்தப் பேழைக்குள்ளேயே ஒரு கொலைப் பொறியை அமைத்து பிராணிகளைக் கொன்றார்.

இத்தப் பரிசோதனையில் மிகச் சிறிய பிராணிக்குக் கூட ஒரு ஆன்மா (ஆவி) இருக்கின்றது: அது மரணத்தின் போது உடலைவிட்டு வெளியேறுகின்றது என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிருபிக்கப்பட்டது

இவரது பரிசோதனைகளும், அவர் எடுத்த படங்களும் பத்திரப்படுத்திவைக்கப்பட்டுள்ளன.

அவர் எடுத்த படம் ஒன்றில் கண்ணாடி பேழைக்குள் ஒரு வெட்டுக்கிளி இறந்து கிடக்க அதன்மேலாக அதே அளவிலான ஒரு புகை உருவம் மிதந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவர் எடுத்த இன்னொரு படத்தில் கண்ணாடிப் பேழையில் எலியொன்று மல்லாக்காகச் செத்துக்கிடக்க அதன் உயிர் (அல்லது ஆவி) மூன்று அங்குலம் உயரத்தில் அந்தரங்கமாக உட்கார்ந்து கொண்டிருக்கக் காணப்பட்டது. இதற்கு வால், செவி, கண்கள் எல்லாம உயிர் உள்ள பிராணி போல் காணப்பட்டது.

இந்த ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. நவீன சாதனங்களைப் பயன்படுத்தி இது பற்றிய ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் இப்பொழுது நடத்திவருகிறார்கள் இதன் முடிவு இன்னும் அபூர்வமான விஷயங்களை எமக்கு தரக்கூடும். (-வ-ம்-)

## மொரார்ஜி ஒரு இயற்கை தத்துவ வைத்தியர்!

இந்தியப் பிரதமமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் இயற்கை வைத்தியத்தில் மிகவும் நம்பிக்கைகொண்டவர்.



இந்த நம்பிக்கை அவருக்கு எப்படி ஏற்பட்டது தெரியுமா? அவரே கூறுகிறார்.

1914-ம் ஆண்டு எனது தந்தையார் காலமானார். நான்தான் குடும்பத்தில் மூத்தவன். குடும்பப் பொறுப்புகள் எல்லாம் என் தலையில்தான் விழுந்தன. நான் பம்பாயில் போய் தங்கினேன். அங்கே ஒரு நூலகத்தில் இயற்கைத் தத்துவம் பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்று இருந்தது. அதனைப் படித்து புரிந்து கொண்டேன். அந்தக்காலத்தில் எனக்கு ஒருவித தலையிடி இருந்து வந்தது. இரண்டொரு மாதங்களுக்கொரு தடவை இதன் தாக்கத்தினால் அவதியுற்றேன். சில சமயம் ஆறு நாட்களுக்கு மேல் தலையிடி நீடிக்கும். அப்பொழுது ஒருவித வேலையும் செய்துகொள்ள முடியாது. இதை எப்படி வெல்வது என்று யோசித்தேன். அடுத்தமுறை வரும்போது உபவாசம் இருப்பது என்று தீர்மானித்தேன். பரிசோதனையாகத்தான் செய்தேன். தலையிடி மூன்று நான்கு நாட்களுக்குள் மறைந்தது. அதுவே கடைசித் தாக்குதலாகும். ஒரு சில நாட்கள் உபவாசமிருந்ததில் தலையிடியை நிரந்தரமாகவே துரத்திவிட முடிந்தது என்கிறார் தேசாய்.

இவ்வாறு எந்த நோய்வந்தாலும் உபவாசம் இருந்து அதனைப் போக்கிக்கொள்கிறாராம் தேசாய்.

இந்த இயற்கைவைத்தியமுறையில் தமது சகோதரனின் க்ஷயரோகத்தைக் கூட தாம் போக்கியிருப்பதாக அவர் கூறுகிறார்.

இயற்கை வைத்தியம் வெற்றிபெறவேண்டுமாகில் அதில் முதலில் நம்பிக்கை ஏற்படவேண்டும். இந்த நம்பிக்கையே ஒரு சிகிச்சைதான் என்கிறார் மொரார்ஜி.

(வ. ம்)

## வெங்காயத்தின் மகிமை!

வெங்காயம் நரம்பு மண்டலத்துக்கு ஒரு 'டானிக்' போல் பயன்படுகின்றது. ஜீரண சக்தியைக் கூட்டுகிறது. நித்திரையின்மையைப் போக்குகிறது. புற்றுநோய் எதிர்ப்புச் சக்திகள் இதில் அடங்கியிருப்பதாக ஆதிகாலம்தொட்டு ஒரு நம்பிக்கையுண்டு.

பெரிய வெங்காயங்களை எடுத்து வட்டம் வட்டமாக வெட்டிக்கொள்ளுங்கள். அந்தத் துண்டுகளின் மீது சர்க்கரையைத் தூவி ஒன்றின்மீது ஒன்றாக ஒரு கறை ஏற்படாத பாத்திரத்தில் மூடிவையுங்கள். இவ்வாறு செய்வதின் மூலம் பாத்திரத்தில் வடியும் வெங்காய ரசத்தை சிறுவர்களுக்கு பருக்கலாம். அடிக்கடி தடிமன், மூக்கடைப்பினால் அவதியுறும் குழந்தைகளுக்கு இது நல்ல ஔடதம் என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

## இப்படி ஒரு குழந்தை

தமிழ்நாட்டில் திண்டுக்கல் என்ற இடத்தில் ஒரு கர்ப்பிணியின் வயிற்றிலிருந்த சிசுவின் எடை 45 கிலோ கிராம் என்று ஒரு செய்தி கூறுகிறது. ஒன்றரை ஆண்டுகள் பிரசவம் ஆகாமலிருந்த இப் பெண்மணிக்கு டாக்டர்கள் இரண்டு மணி நேரம் அறுவைச்சிகிச்சை செய்து சிசுவை வெளியில் எடுத்தார்களாம்.

உலகில் 70 நாடுகள் மரணதண்டனையை ரத்து செய்துள்ளன.

## இப்படிச் செய்தால்....

ஒரு கிளாசுக்குள் இன்னொரு கிளாசை வைத்துவிட்டு சிலசமயம் இரண்டையும் பிரிக்கமுடியாமல் சிலர் தவிப்பார்கள் இதைப் பிரித்தெடுக்க ஒருவழியுண்டு. உள்ளே இருக்கும் கிளாசுக்குள் குளிர்ந்த நீரை ஊற்றுங்கள் பின் இரண்டையும் சுடுநீரில் சிறிதுநேரம் வையுங்கள். இந்த வெட்பதட்பநிலை காரணமாக வெளியிலுள்ள கிளாஸ்விரிந்துகொடுக்கும், உள்ளே இருப்பது இறுக்கமடையும். சுலபமாக இரண்டையும் உடையாமல் கழற்றிவிடலாம்.

- வ - ம்.

# குயிலின் கதை !

மா மரத்தின் கிளையில் அமர்ந்து மிக சோகமாகப் பாடிக்கொண்டிருந்தது அந்தக் கருங்குயில்.

நான் என் அறையில் இருந்தபடி யன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். மிகப் பரிதாபமாகவிருந்தது.

துன்பத்தில் உழலும் மனிதன் வானத்தில் இன்பமாகப் பறந்து திரியும் பறவைகளைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடுகிறான் இந்தப் பறவைகளைப்போல் நினைத்த இடத்தில் உண்டு, கிடைத்த இடத்தில் உறங்கி, எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இன்றி வான வீதியில் சுதந்திரமாகப்பறந்து திரிந்தும், மரக் கொப்புகளில் அமர்ந்து காதல்கீதம் இசைத்து மகிழ்ந்தும் இன்பமாக வாழக் கிடைக்குமானல் இந்த உலகமே ஒரு சுவர்க்க பூமியாகி விடும் அவனுக்கு!

ஆறறிவுபடைத்த மனிதனே கண்டு பொருமை கொள்ளும் படியான இந்தப் பறவை இனத்தில் இப்படியும் ஒரு பிறவியா!

காலமெல்லாம் சோகக்கீதத்தைத் தவிர வேறு இசையே இந்தக் குயிலுக்கு வராதா! வாழ் நாளெல்லாம் இந்தச் சோக கீதம்தானு?

இப்படி எண்ணிக்கொண்டிருந்தவேளையில் அந்தக் குயில் சற்று ஓய்ந்துவிட்டு, மீண்டும் பாட ஆரம்பித்தது.

குரல் என்னவோ இனிமைதான். ஆனல் ராகம் வெறும் முகாரியாகத்தானே இருக்கிறது!

எங்கிருந்தோ ஒரு காகம் வந்து அந்த மரத்தின் ஒரு கிளையில் அமர்ந்தது. தலையை அசைத்து கண்களை உருட்டி அந்தக் குயிலை இரண்டொரு தடவை பார்த்தது. பிறகு 'கா, கா' என குரல் எடுத்துக் கத்தியது.

அப்பப்பா என்ன கடூரம். காதைப் பொத்திக்கொண்டேன் நான்.

குயிலும் தன் இசையை நிறுத்திக்கொண்டது. காகத்துக்கு யாரைப்பற்றியும் கவலையில்லை.

அது தன் கர்ணகடூரமான குரலில் என்னென்னவோவெல்லாம் சொல்லி பாடிக்கொண்டு ஒய்யாரமாக எழுந்து பறந்து சென்றது.

குயிலும், காகமும் அமைப்பில் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. ஆனல் குரலில், வாழ்க்கையில்,அன்றாட செயல் முறைகளில் எத்தனை வித்தியாசம்!

நான் அந்தக் குயிலிடமே கேட்டேன். ",இந்தச் சோகப் பாட்டைத் தவிர வேறு ஒன்றுமே உன்னல் பாடவராதா" என்று.

குயில் என்னை ஒருதரம் கண்ணைச் சிமிட்டிப் பார்த்துவிட்டு புன்னகைசெய்தது.

சற்றுமுன் பறந்து சென்ற காகம் சில காய்ந்த குச்சிகளை மூக்கில் ஏந்திக்கொண்டு மீண்டும் மாமரத்துக்கு வந்து அமர்ந்து, பின் எங்கோ புறப்பட்டுச் சென்றது.

அதுவரை வேறு எங்கோ ஒளித்துக்கொண்டிருந்த இன்னெரு குயில் அந்தக்காகத்தைப் பின் தொடர்ந்து பறந்து சென்றது.

மரத்தில்அமர்ந்திருந்த குயில் இப்பொழுது என் கேள்விக்கு பதில் சொல்ல ஆரம்பித்தது.

என் வாழ்க்கையே சோகமயமாகிவிட்ட போது சோக கீதத்தைத் தவிர வேறு என்னத்தை என்னிடமிருந்து நீங்கள்எதிர்பார்க்கமுடியும் என்று ஒரு பீடிகைபோட்டுக்கொண்டு அந்தப் பெண்குயில் தன்கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

நான் சின்னஞ்சிறு குஞ்சாக கூட்டில் இருந்தேன். ஆரம்பத்தில் என் பெற்றோர் என்மீது ஆசையும் அன்பும்கொண்டு எவ்வளவு பாசத்தோடு கவனித்தார்கள் என்பதை நினைக்க இப்பொழுதும்எவ்வளவுமகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? ஆனல் அது ஒரு கொஞ்சக் காலம்தான். எனக்குச் சிறகு முளைத்து மற்ற என் சகோதரக் குஞ்சுகளுடன் சேர்ந்து கூட்டுக்கு வெளியில் வரத்தொடங்கிய காலந்தொட்டு எனக்குத் துன்பம் தொடர ஆரம்பித்தது. தாய் தந்தையர் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்தனர். ஏதோ மாற்றார் குழந்தையைப்போல நடத்த ஆரம்பித்தார்கள். இந்தத் திடீர் மாற்றம் ஏன் ஏற்பட்டது என்று யோசித்துப் பார்த்தேன். என் சிறகில் காணப்பட்ட புள்ளிகளும், என் குரலில் இருந்த வித்தியாசமும் அவர்களை என்மீது வெறுப்புக் கொள்ளச்செய்தது போலும். அதன் பிறகுதான் எனக்கும் புரிந்தது இவர்கள் என் பெற்றோர் அல்லவென்பது. நான் இன்னும் சற்று வளர்ந்து பறக்க ஆரம்பித்தேன். என் வளர்ப்புப் பெற்றோர் முன்னிலும் பார்க்க வெறுத்து ஒதுக்கத் தொடங்கினர். என்னை வளர்த்த என்தாய் ஏதோ பாசத்தில் அவ்வப்போது ஏதாகிலும் கொண்டுவந்து தருவாள். என்னதான் இருந்தாலும் அவளும் ஒரு தாய் அல்லவா? என்னைத் தன்னைப்போல கத்தும்படி கற்றுக்கொடுத்தாள். நானும் கத்திப்பார்த்தேன். பல தடவைகள்—முடியவில்லை. நான் கத்தியபோதெல்லாம் அது என் அவலக்குரலாகவே வெளிவந்தது. அவள் 'கா கா' வெனக் கத்த, நான் 'கூ கூ' வெனக் கூவினேன். இதற்குமேலும் அவளால் பொறுக்கமுடியவில்லை. அவள் என்னை அப்படியே கைவிட்டுச் சென்றுவிட்டாள்—ஊர் உலகம் தெரியாத நான் என்ன செய்வேன்? மரத்துக்கு மரம் பறந்து பார்த்தேன். சிறகு வலி எடுத்ததுதான் மிச்சம். போதாக்குறைக்கு என்னை வளர்த்த என் தகப்பனே, வேறு தனது சினேகிதர்களுடன்வந்து என்னைத் தாக்க ஆரம்பித்தார். நான் ஒரு அடர்த்தியான கிளையில் ஒளித்துக்கொண்டு என் விதியை நொந்து கொண்டிருந்தேன் என்னை வளர்த்தவள் மீண்டும் வந்தாள். பெண் அல்லவா! 'கா கா' என்று கரைந்து என்னை அழைத்தாள். அந்தக் குரலின் இனிமை எனக்குமாத்திரம்தான் புரியும். நான் என்இருப்பிடத்திலிருந்து வெளியில் வந்தேன். அவள் சொண்டுக்குள் வைத்திருந்த உணவை எனக்கு அன்போடு தீத்தினள். நான் பேசாமல் இருந்திருக்கலாம். ஆசையோடு 'அம்மா' என்று அழைத்துவிட்டேன், ஆனல் என் அன்பு அவளுக்கு வேம்பாகக் கசந்துவிட்டது. அவளைப் போல நான் கத்தவில்லையே! கூவிவிட்டேன். அவளுக்கு ஆத்திரம் மேலிட்டது. முகத்தைச் சுளித்துக்கொண்டு வெறுப்போடு பறந்துசென்றவள்தான திரும்பி வந்து பார்க்கவே இல்லை.

இதன் பிறகுதான் எனக்கு புரிந்தது. நான் வேறு இனம். அவர்கள் வேறு இனம் என்று அவர்களுக்குகத்ததான் தெரியும்—எனக்குகூவத்தான் வரும்.

நாதியற்றுப்போன நான் என் விதியை நினைந்து குரலெடுத்து கூவி அழுதேன். இப்படி எத்தனை நாட்களோ! அம்மம்மா!

இவ்வாறு தனிமையில் இருந்தே சற்று துணிவு ஏற்பட்டது. அதன்மேல் ஆங்காங்கே சென்று எனக்கு கிடைத்த இரையைத் தேடி உண்ண ஆரம்பித்தேன்.

பருவகாலம் மாறியது. வசந்தம் வந்தது. எனக்கு ஏதோ ஒரு தாகம். ஏன் தாபம் என்றுதான் சொல்ல வேண்டும். அது என் பருவ கோளாருகவிருக்கலாம்

நான் விதவிதமாகவெல்லாம் பாட ஆரம்பித்தேன. எனக்கே ஆச்சரியம்! இத்தனை அழகான குரலை எனக்குத் தந்த அந்த இறைவனை நினைத்து அவனை புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தேன்.

அவனைத் தவிர எனக்கு இந்த உலகில் வேறு யாரும் துணையில்லை.

ஊர் இல்லை, உறவு இல்லை, உற்றார், பெற்றார் ஒருவருமில்லை - நண்பரில்லை- நாயகனுமில்லை. ஆம் - நாயகனுமில்லை. இறைவனையே என் இதய நாயகனுக நினைந்து பாடினேன்... என்குரல் அவனுக்குக் கேட்டுவிட்டதோ என்னவோ... என் குரலைப் போலவே இன்னெரு குரல் எங்கிருந்தோ வந்து என் காதில் விழுந்தது. எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

அனாதரவாகிப் போகும் அபலை உயிர்களுக்கு ஆண்டவன் என்னமாதிரியெல்லாம் அபயம் அளிக்கிருன்!

அந்தக் குரல் வந்த திசையை நோக்கிப் பறந்தேன்- ஓர் இடத்தில் அமர்ந்து மீண்டும் பாடினேன். அந்தக் குரல் என்னை அண்மி வந்தது. உற்றுக்கவனித்தேன். என்னைப் போலவே ஒரு உருவம். ஆமாம், நான் இந்த உலகில் தனித்துப்போகவில்லை. என்னைப்போலவே வேறும் உயிர்கள் இருக்கவே செய்கின்றன.

வந்தது ஓர் ஆண்குயில். நாங்கள் இருவரும் சேர்ந்து பாடினேம், மாறி மாறிப் பாடினேம்.

தனிமையில் தவித்த எனக்கு துணை கிடைத்துவிட்டது. நான் உலகை மறந்தேன்— இன்பலாகிரியில் நாங்கள் இருவரும் திளைத்து மகிழ்ந்தோம். சிறிதுகாலம்தான். பின் நான் கர்ப்பமுற்றேன். மீண்டும் துயரம் தொடர ஆரம்பித்துவிட்டது.

ஏன் என்று கேட்கிறீர்கள்? எங்களுக்கென்று ஒரு கூட்டைக் கட்டிக்கொண்டு என் வயிற்றில் இருக்கும் முட்டைகளை இட்டு என் குஞ்சுகளை பொரிக்கச்செய்து அவைகளை அணைத்து வளர்த்து என் இனத்தைப் பெருக்கி, கூடி கூட்டமாக வாழக்கூடிய வாய்ப்பை இறைவன் எங்களுக்குத் தரவில்லையே! அதை நினைத்துத்தான் நான் இப போது அழுகிறேன்.

ஏன் உன் கணவன் ஒரு கூட்டைக் கட்டித்தரமாட்டானு? என்று கேட்பீர்கள்.

ஒரு கூட்டைக் கட்டி குடித்தனம் நடத்தவேண்டும் என் பதில் அவருக்கும்தான் ஆசை. ஆனல் அதற்கு பயிற்சி இல்லையே! அவரை வளர்த்தவர்கள் சொல்லித் தரவுமில்லை. தானே பழகிக்கொள்ள திராணியும் இல்லை.

இது எங்கள் இனத்தின் தலைவிதி என்று சொல்வதா அல்லது தெய்வத்தின் சாபம் என்று கொள்வதா?

இவ்வாறு கூறிய குயில் மீண்டும் ஏதோ வேதனை கொண்டதுபோல் கூவியது.

அந்த வேதனைக் குரலில் தான் எத்தனை இனிமை.


சற்றுமுன் கூடுகட்டுவதற்காக குச்சுகளுடன் பறந்து சென்ற காகத்தைப் பின் தொடர்ந்து சென்ற ஆண்குயில் திரும்பிவந்தது. பெண் குயிலிடம் ஏதோ கூறிவிட்டு மீண்டும் பறந்தது.

அந்தப் பெண்குயில் என்னைப் பார்த்து ஒரு முறுவலைச் சிந்திவிட்டு தன் கணவனைத் தொடர்ந்து பறந்து சென்றது.

நான் சிந்தனையில் ஆழ்ந்து சிலையாக நின்றேன்.

பன்னீரன்.


## குளக்கரையினிலே




கூடிப் பேசி வாழும் குடும்பம்
கோடி இன்பம் சூழும் குடும்பம்

இல்லம் சிறக்க, உள்ளம் களிக்க, பிள்ளைகள் சுகமாய்த் துள்ளித்திரிய, நானே அவர்கள் நலமெலாம் எய்த, கணவன் மனைவி கலந்து பேசி, இடைவெளி விட்டுக் குழந்தை பெற வேண்டும். உனக்கு நான், எனக்கு நீ என்று ஒருவரோடொருவர் ஒத்துப் பேசிக் குடும்பத்திட்டம் செய்து குதூகலமாய் வாழுங்கள்.

எல்லா விபரங்களையும் இலகுவாய் விளக்கும் குடும்பத் திட்டப் பிரசுரங்களை இலவசமாய்ப் பெற இந்தக் கூப்பனை நிரப்பி, கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புங்கள்.

பெயர்.........................................

விலாசம்: .........................................

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கம்
37/27 புல்லர்ஸ் ஒழுங்கை த. பெ. எண். 365 கொழும்பு 7. தொலைபேசி: 93131

EB/C/1

தினசரி 10-30, 2-30, 5-30
**வின்ஸர்** சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த

**சத்யம்**

(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 10-30 2-30 6-00
**மனோஹரா** எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி

நடித்த

**உழைக்கும் கரங்கள்**

(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி காலை 9-30, 12-30,
(யாழ்ப்பாணம்) பி. ப. 3-30, 6-00 மணி
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த

**அன்னக்கிளி**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி10-30, 2-30 மாலை6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா

**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** தினசரி 10-30, 2-30, 6-00
போன்:
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா

**நீ ஒரு மகாராணி**

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
யாழ். நகர் ஃ ஸ்ரீராம் ஃ சாவித்திரி
போன்: 7642 ஃ தங்கவேலு நடித்த

**குடும்பம்**

சிரிய குடும்பச் சித்திரம் - [புதிய பிரதி]

தினசரி 10-30, 2-30, 6-00
**ராஜா** போன்: 7180
(யாழ்நகர்) சசிகுமார் - நிர்மலா -
சந்திரபாபு நடித்த

**அவள்** (கலர்) [புதியபிரதி]


# சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றைத் திருக்கல் மாட்டு வண்டிலோடு கூட ஒரே கைப் பற்றும் கயிற்றிழுவையுமாகக் கடற்கரைத் தென்னையார் முன் கொணர்ந்து நிறுத்தி விட்ட பெருமிதம் அதுசமயம் என்னிடத்தே.

கந்தையா அண்ணரின் வண்டிலில்தானே அப்பு என்கூட ரயிலடிக்கு வந்து என்னை ரயிலேற்றிவிட்டுப்போனர்! அந்த ஆளுடனே சின்னவயசு முதலாகப் பழகநேர்ந்ததின் பெறுபேருக நெஞ்சத்தில் தித்தித்த ஒரு நிகழ்ச்சி - ஒரு நாள் அனுபவம்! அதற்குத்தான் கால், கை பொருத்தி இறகு வைத்து ஜோடித்து ஒப்பனையும் சாற்றுபடியுமாக ஒருவிதமாய் கதைபுனைந்திருந்தேன்.

வண்டில் கந்தையாவின் கதையை முழுக்கவும் பொறுமையுடனே கேட்டு நின்ற தென்னையார் மகிழ்ச்சி ஆரவாரமாகக் கைகொட்டி ஆர்ப்பரித்தார். கடகடவென்று சிரிப்பொலியும் எழுந்தது. அந்த ரசிப்பு நிலையை இன்றைக்கும் கூட நினைவுத்திரையில் மீட்டுப் பார்க்கும்போது- எங்களூர் இரசிகமணி கனகசெந்திநாதன் பிறர் இலக்கியப் படைப்புகளை அந்தளவு மனமார்ந்த ஈடுபாட்டுடனே ரசித்து அநுபவிப்பதைத்தான் அதற்கு ஒரேஒரு ஒப்புவமையாகக் கூறமுடியும்!

தென்னையார் என் உபயமாக என்னிடம் எதிர்பார்த்த கதைப்புனைவு இந்தவிதமாக தென்னையார் சந்நிதியில் இனிதாக நிவேதனமாகி அதன் பின் தென்னைக்கோனர் கதையைத் தொடங்குவதை நான் ஆவலுடனே எதிர்நோக்கியிருந்தபோது என் வசிப்பிடத்திலிருந்து ஒருவர் அவ்வேளை அவசர நடைஓட்டமாக அங்கு வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தபால் வந்ததென்று சொல்லியவர், நான் உடனே அன்றைக்கிரவே பயணப்பட வேண்டுமென்றும் தபாலின் பொருளடக்கத்தை சுருக்கமாகத் தெரியப்படுத்தினர்.

நான் தென்னையாரை ஏறிட்டு நோக்கினேன்.

''நல்லது. மனமகிழ்ச்சியாகப் போய்வா தம்பீ. என்கூடச் சில தினங்கள் பழகியதனுல் தானே இன்றைக்கு நீ எனக்குக் கூறிய கதை பிறந்தது அப்போ, அதுவே நான் உனக்கு ஈந்த மற்ருெரு கதையாக இருக்கட்டும். அதனை என் அன்பளிப்பாகக் கொண்டு செல். உன் சிந்தைக்கினிய நினைவாக அது என்றைக்கும் நிலைபெறும். என் நல்லாசிகள். போய் வா மகனே'' என்று தென்னையார் மனம் தொட்டுப் பேசி மகரதோரணம்போட்டு விடைகொடுக்க, நான் அங்கிருந்து என் வசிப்பிடம்நோக்கி விரைந்தேன்.

அன்றிரவே யாழ்ப்பாணம் ரயில்வண்டியில் கொழும்பூர் விட்டு என் தாயகம் நோக்கிப் பயணமானேன்.


**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 2-45 6-45
முத்துராமன்-ஜெயா
**கனிமுத்து பாப்பா**

**பூலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
சிவாஜி - மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**RIO** Grand Release
(Jaffna) Daily 10-30, 4-45, 7-15 p. m. only
Action packed-Suspense filled
Thrilling Drama
Robert Shaw - Robert Ryan in
**CUSTER OF THE WEST**
(Scope Color. Also News-Opening of Parliament)

**Regal** (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p. m.
One of the foremost Fun Films of the year.
The story of strange carrying— on at a Caravan
KENNETH WILLIAMS — ELKE SOMMER
in
**"CARRY ON BEHIND"**
(Color)


## ஒளிபிறந்தது...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு ஜயரத்தினம் அவர்களின் அணுகுமுறையாக இருந்தது. ஜயரத்தினம் அவர்களும் யானும் கல்வித்துறை சார்ந்த பல பணிகளில் ஒன்ருக - ஒரு மனத்தினராக ஈடுபட்டிருந்தோம். இங்கும் இனிமையும் விநயமும் க்க இயல்பையும் எடுத்த பணிகளில் உறுதியான பற்றையுமே நான் கண்டேன். ஆடம்பரமான சுய விளம்பரத்தையோ, இடிமுழக்கம் போன்ற பிரகடனங்களையோ அவர் மேற்கொண்டதில்லை. அவர் தமது உடனுசிரியர்களையோ மாணவரையோ பயமுறுத்தியது கிடையாது; உணர்ந்து பணிசெய்யத்தூண்டுவதே அவரது நெறியாகும்.

—(மஹாஜனன்- ஜயரத்தினம் மாட்சி விதப்பு இதழ்)


# யாழ் - ராணி சினிமாவில்

தினசரி காலை 8-00, 11-00, பி. ப. 2-00, 5-00.

ஜெய்சங்கர்
முத்துராமன்
லக்ஷ்மி
பத்மினி
சுந்தரராஜன்



நாகேஷ்
சச்சு
வி.எஸ்.ராகவன்
தேங்காய் சீனிவாசன்
உதயசந்திரிகா

★ நடித்த

தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும் ★ தேவரின்

# பெண் தெய்வம்

திரைக்கதை, தயாரிப்பு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர்

டைரக்ஷன்
எம். ஏ. திருமுகம்

முக்கியமாக ஒவ்வொரு பெண்களும் பார்க்கவேண்டிய சிரிய குடும்பச் சித்திரம்.

# தமிழ் மக்களுக்கு ஒரு சவாலும் சந்தர்ப்பமும்!

**யோகேந்திரா துரைசுவாமி**

அண்மைக் காலத்தில் நமது நாட்டில் நிகழ்ந்த மோசமான சம்பவங்கள், நமது தேசியஅமைப்பின் அத்திவாரத்தையே ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது. இச் சோகசம்பவங்கள், ஈழத்தின் மக்கள் பலருக்கும் ஒரு திடீர் விழிப்பை ஏற்படுத்திவிட்டது!

யாழ். களியாட்டவிழாவொன்றில், பொறுப்புணர்ச்சியற்ற - கடமையுணர்வற்ற சில பொலிஸார் சம்பந்தப்பட்ட ஒரு சிறிய சம்பவம்; இனக்கலவரமாக வெடித்து, ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை, குறிப்பாக சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்களைப் பாதித்து, நாட்டின் இன உறவுக்கே ஒரு சாபக்கேட்டை உண்டாக்கிவிட்டது! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் காடையர் கூட்டமும் மக்களைக் கொன்று குவித்தது, இவர்களின் கொடுமையால் ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர்! இதனுடன் நிற்காமல், இந்த வன்முறைக் கும்பல், தமிழ்மக்களின் உடைமைகளைக் கொள்ளையிட்டும், தீயிட்டும், கட்டடங்களை நாசமாக்கியும் பல லட்சக்கணக்கான ரூபா மதிப்புள்ள சேதத்தை ஏற்படுத்தின! சட்டமும், ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து, நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்களே பொறுப்பாளிகளாகி, வெறும் பார்வையாளர்களாக மாறும் நிலையை அடைந்து வன்செயல்களிலும் ஈடுபட்டனர்! இவற்றை உற்றுநோக்கும்போது ஒரு உண்மை தெரிகிறது.

இந்த நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களினுலும்; தமிழர்களின் ஓரளவு ஆதரவினுலும் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்திற்கு தீங்கும் கேடும் விளைவிக்கும் எண்ணத்துடன் சில தீய சக்திகளினுலும், தோற்கடிக்கப்பட்ட கோஷ்டியினராலும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நாசவேலையே இது என்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. தமிழ்மக்களின் பிரச்னைகள் தீர்த்துவைக்கப்பட்டு, நீதி வழங்கப்படும் என்று புதிய அரசாங்கம் தனது கொள்கை விளக்கஉரையில் குறிப்பிட்டிருந்தது; இந்தத் தீயசக்திகளுக்கு பெரும் பீதியையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி, தங்களின் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தின.

திடீரென ஏற்பட்ட தாக்குதல்கள் காரணமாக, பல தமிழர்கள் கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்ததால், இவைகள் பின்னர் தற்காலிக அகதிகள் முகாம்களாக மாற்றப்பட்டன. அகதிகள், உடல்நோவு, மனநோவு காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த வேதனைகளிலிருந்து இவர்கள் விடுபட இன்னும் எத்தனை நாட்கள் ஆகுமோ என்பதைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது!

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிபீடத்தில் ஏறிய அரசாங்கங்களும், இருபெரும் சமூகத்தின் தலைவர்களும், நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்க்கத் தவறிவிட்டனர். பல இன மக்கள் வாழும் ஒரு சமூகத்தில் இவ்வித மனோபாவம் வளர்க்கப்படுவது அவசியம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மனித உரிமைக்கு மதிப்பளிக்கும் நியாயமான பண்புகள் உதாசீனப் படுத்தப்படும்போது, ஒழுக்க முறைக்கேடுகள் கட்டவிழ்த்து விடப்படும்போது, பொது வாழ்வில் சீர்குலைவுகள் ஏற்பட்டு இந்த நாட்டின் எதிர்காலத்தையே பாழாக்கிவிடும். இவ்வித சூழ்நிலையில் எந்த விதப் பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டுவிடமுடியாது. இதனுல் சகல பிரிவினருமே பாதிக்கப்படுவர் என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மை. எந்த அளவில் வெளிநாட்டு உதவி அல்லது சர்வதேச இயக்கங்களின் உதவிகள் பெறப்பட்ட போதும், சரியானநிலையில் சீர்படுத்திவிடமுடியாது. அமைதி நிலைநாட்டப்பட்டாலன்றி, வேலையில்லாப் பிரச்னைகள், வாழ்க்கைச்செலவுகள் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாது.

## நகரில்கூட பாதுகாப்பில்லை

சிங்கள மக்களிடையேயுள்ள தீயசக்திகளும், தோல்விகண்டவர்களும், புதிய அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுக்க - தங்களின் நோக்கத்தை நிறைவேற்ற தமிழ் மக்களைப் பலிக்கிடாவாக்கினர். அதேநேரத்தில் தமிழர்களிடையேயுள்ள ஒரு சில பிரிவினரும் இவ்விதத் துர்ப்பாக்கிய நிலைக்கு மறைமுகமாக உதவிபுரிந்துவிட்டார்கள் என்று கூறவேண்டியிருக்கிறது. தீர்க்கதரிசனமற்ற வெறும் சுலோகங்களையும், தம்மால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளையும் கொடுத்தது சரியானதல்ல என்று சுட்டிக்காட்டப்பட வேண்டும். தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளினுல் நீதியான ஒரு கோபம் அவர்களுக்கு ஏற்பட்டபோது, இவர்களுக்கு நிம்மதியளிக்கும் வகையில் ஒரு சுலோகம் எழுப்பப்பட்டதென்ருலும், அந்தச் சுலோகத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனென்ருல், வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதான பிரதேசங்களில் - தங்களின் சொந்த நகரமான யாழ். நகரிலும்கூட தமிழர்களைக் காப்பாற்றமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. போராடுவதற்கும் எங்கள் பிரதேசங்களை மீட்பதற்கும் தயாராகிவிட்டோம் என்று சுலோகங்கள் தெரிவித்த போதிலும், எங்கள் யாழ். நகரில் கூட தமிழர்களைப் பாதுகாக்க ஒரு சிறிய குழு கூட அமைக்கப்படவில்லையே!

எமது கவலைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்தச் சூழ்நிலை சரியல்ல. எமக்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நாம் அதிகமாகச் சிந்திக்கவேண்டும். மனத்தைரியத்தை உண்டாக்கி, நரம்புகளைப் பலப்படுத்தி, மனிதத்தன்மையை விருத்தி செய்யவேண்டும். இவற்றுடன் எமது குணதிசயங்களை நல்வழிப்படுத்தி, எமது இனப் பெருமைகளை வெளிக்காட்ட வேண்டும்.

பழம்பெருமைகளைப் பேசுவதைக் கைவிட்டு, நாம் இப்போது எங்கே நிற்கின்ருேம்; நமது நிலை என்ன என்ற மதிப்பீட்டை நடத்துவது அவசியம்.

(யாழ். ரோட்டரி கழகத்தின் விசேஷ கூட்டமொன்றில் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆற்றிய உரை)

(மிகுதி நாளை வரும்)

# நிலைமை சீராகாமல் வேலைக்கு அழைப்பதா?

## பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக பொதுச் சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களினுல் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை அரசாங்கம் சீர்செய்யாது 50 வீத சம்பள முற்பணத்தை மட்டும் வழங்கி, 19-ம் திகதிக்குமுன்னர் வேலைக்குதிரும்புமாறுவிடுத்திருக்கும் கோரிக்கை மனிதாபிமானமற்றதும், நடைமுறைக்கொவ்வாததும் ஆகும்.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் கழக பொதுச்சபை நேற்று யாழ்ப்பாணத்தில்கூடி அரசின் கோரிக்கையை நிராகரித்து மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியது.

இக்கூட்டம் யாழ். றிம்மர் மண்டபத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக தலைவர் டாக்டர் க. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு. பாதிக்கப்பட்ட தமிழ்ஊழியர் கழகத்தின் 33 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 5000க்கும் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு!

77-ம் ஆண்டு ஆகஸ்ட் மாத இனக்கலவரச் சம்பவங்களைப்பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்த விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டும். இச் சம்பவங்களுக்கு உடந்தையானவர்களை தண்டனைக்குட்படுத்தி பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பீதியைப் போக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியரிடமிருந்து எத்தகைய இழப்புக்களுக்கு அவர்கள் ஆளாகியுள்ளார்கள் என்பதை அறிந்து அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு புனர்வாழ்வுக்கான உதவியை அரசு வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு வேலைக்குத் திரும்புமிடத்தில் அவர்கள் பாதுகாப்புடனும் பயமின்றியும் வதிய வசிப்பிட வசதிகளை செய்யவேண்டும்.

சகல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (கெ-இ)

## இன்று வருகிருர்

கொழும்பு, சனி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேணல் சி. ஏ. தர்மபாலா இன்று காலை யாழ்ப்பாணம் வருகிருர். கொழும்பு சென்றுள்ள யாழ். மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கமும் அவருடன் வருவார். பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் குறித்து ஒரு மகாநாட்டிலும் கேணல் தர்மபாலா கலந்துகொள்வார்,

## தேசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(5) ஜனாதிபதி ஒருவர் மக்களால் தெரிவு செய்யப்படுவார்.

(6) ஒரு உப ஜனாதிபதியும் மக்களால் தெரிவுசெய்யப்படுவார். இவர் ஒரு தமிழர் அல்லது முஸ்லிமாக இருப்பார்.

(7) சகலருக்கும் சம உரிமையும் நிர்வாக ரீதியிலான பாகுபாட்டைத்தடுப்பதற்கு இந்திய அரசியலமைப்பிலுள்ள 14-வது ஷரத்தைப்போன்று நமது அரசியலமைப்பிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்காகஇந்தயோசனைகளைப் பிரதமர் தமது கவனத்துக்கு எடுத்துக்கொள்வாரென்றும் மற்றும் தலைவர்களும், எதிர்க்கட்சித்தலைவரும் இது பற்றிக் கவனம் செலுத்துவார்களென்றும் ஸ்ரீ இரத்தின கைலாசநாதக்குருக்கள் தமது மகஜரில் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

## அகதிகளுக்காக கலை நிகழ்ச்சி

(உடுப்பிட்டி)

பரமானந்த ஆச்சிரமத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவும் முகமாக இன்று மேற்படி ஆச்சிரமத்தில் கலைவிழா ஒன்று நடாத்தப்படவுள்ளது. இக்கலைவிழாவில் வசூலிக்கப்படும் நிதி இந்த அகதிகளுக்கு வழங்கப்படும்.

வதிரி திரு.இருதயக்கல்லூரி மாணவிகள் இக் கலைநிகழ்ச்சிகளை நடாத்துகின்றனர். கரவெட்டி புனித லூர்த்து திருக்குடும்பக் கன்னியர் மடத் தாயார் அருட். செல்வி ஜெரோம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

## திருமதி சத்பதி கைதாகி விடுதலை

புதுடில்லி, செப் 17

ஒரிஸா மாநிலத்தின் முன்னுள் முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி இன்று புதுடில்லியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டில் சுற்றுப் பயணப் சென்றிருந்த திருமதி சத்பதி நாடு திரும்பியதும் கைதுசெய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுபட்டார்.

ஒரிஸாவில் திருமதி சத்பதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு வழக்குகளில் அவருக்காக ஏற்கனவே கைது எதிர்ப்பு பிணை அனுமதிக்கப்பட்டிருந்தது.

அளவுக்கு மீறிய சொத்துக்கள் சேர்த்தது, லஞ்சம் வாங்கியது. சதி செய்தது போன்ற குற்றச்சாட்டுக்களின் மீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

## திருமலை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி

2 வருடத்தில் உற்பத்தியை ஆரம்பிக்கும் இந்த ஆலையை 20 ஆண்டுகளில் சிங்கப்பூர் நிறுவனம் இலங்கை அரசிடம் கையளிக்கும்.

ஐ. தே. கட்சி அரசு வெளிநாடு ஒன்றுடன் செய்து கொண்ட முதலாவது ஒப்பந்தம் இதுவாகும். [இ]

## வாள் வெட்டுச் சம்பவம் தியேட்டர் முன் நடந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்.நகரிலுள்ள தியேட்டர் ஒன்றின் முன்பாக புதிய படம் பார்க்க நின்றவர்களிடையே ஏற்பட்ட 'கைகலப்பு' வாள் வெட்டில் முடிந்தது!

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. இச் சம்பவத்தின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கி. சண்முகராஜா என்பவர் வாள் வெட்டுக்கும் எஸ். சதானந்தம் என்பவர் போத்தல் அடிக்கும் இலக்கானுர்கள் இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை தலைமையிலான பொலிசார் அமைதியை நிலைநாட்டியதுடன் சம்பவம்பற்றி விசாரணை செய்துவருகின்றனர். (கு)

## காலவரையின்றி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். இந்துக்கல் லூரியில் தங்கியிருக்கும் அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்றமுடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து 3-ம் தவணைக்கான பாடசாலை ஆரம்பம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## முகாமில் தொற்றுநோய்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அகதிகள் முகாமில் 'பொக்களிப்பான்' நோய் பரவியுள்ளது.

இதையடுத்து இங்குவரும் அகதிகளை கைதடிக்கு மாற்றும் யோசனை பின்போடப்பட்டுள்ளது.

இதேவேளையில் குருநாகலில் இருந்து 84 தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் இரவு இங்கு வந்துள்ளார். (கெ-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.